
ஏப்ரல் 2015 April | இதழ் 291 ISSUE


# தமிழர் தகவல்
# TAMILS' INFORMATION










25வது ஆண்டில் 25th Year

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Growing with the Community ESTD-1991

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
ரஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

*ஆசிரியரிடமிருந்து* **From the Editor**

# 'ஒரு நாள்' ஆசை!

கடந்த மாதம் 24ம் திகதி செவ்வாய்க்கிழமை...

ஸ்பெய்ன் பார்சிலோனா விமானநிலையத்திலிருந்து காலை 10:01 மணிக்குப் புறப்பட்ட ஜேர்மன்விங்ஸ் விமானம், ஐம்பத்தியிரண்டு நிமிடங்கள் கழித்து - காலை 10.53 மணிக்கு வான்வெளியில் தொடர்பற்றுப் போயிற்று.

அந்த விமானம் ஆல்ப்ஸ் மலைத்தொடரில் மோதுண்டு நொருங்கியதாகவும், அதிலிருந்த 150 பேரும் மரணமாகிவிட்டதாகவும் அடுத்த சில நிமிடங்களில் பரபரப்பான செய்தி காற்றுவழியே உலகெங்கும் பறந்து வந்தது.

வழக்கம்போல 'விமான விபத்து' என்றே ஆரம்பச் செய்திகள் கூறினவாயினும், இது துணை விமானியின் திட்டமிட்ட ஒரு செயல் என்பது அடுத்த 48 மணி நேரத்தில் உறுதியாயிற்று.

எதிர்பாராத விதமாக அல்லது தற்செயலாக நடைபெறுகின்ற ஒன்றே விபத்து. ஆனால், ஒருவர் திட்டமிட்டு பலரது மரணத்துக்குக் காரணமாக நடத்துகின்ற தாக்குதல் படுகொலை என்பதற்கு மறுபேச்சுக் கிடையாது.

அப்பாவிப் பொதுமக்களை இலக்கு வைத்து இக்கொலைகளைப் புரிந்த துணை விமானியின் பெயர் அந்திரியாஸ் லுபிற்ஸ். திருமணமாகாத 28 வயது வாலிபர். ஆனால், காதலில் தோல்வியுற்றவர் என்றும், மனஅழுத்தத்தினால் பாதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்தவர் என்றும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

வேலை பறிபோய்விடக்கூடாது என்பதற்காக தமது சுகவீனத்தை இவர் விமான நிறுவனத்துக்குத் தெரிவியாது மறைத்து வைத்திருந்தார் என்றும், சம்பவம் நடைபெற்ற நாளன்று இவரை வேலைக்கு விடுப்பு எடுக்குமாறு இவரது மருத்துவர் எழுத்து மூலம் அறிவுறுத்தியிருந்தார் என்றும் இப்போது அதிகாரிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இவை போதாதென்று, இவரது முன்னாள் காதலி என்பவர் இப்போது பகிரங்கப்படுத்தியுள்ள தகவல்கள் அதிர்ச்சியளிப்பவை. 'ஒரு நாள் நான் செய்யப்போகின்ற வேலை....அப்போது எனது பெயரை அனைவரும் தெரிந்து கொள்வர் (One day I'll do something....and then everyone will know my name) என்று அந்திரியாஸ் கடந்த ஆண்டு தம்மிடம் தெரிவித்ததாகவும், அப்போது புரியாத அதன் அர்த்தம் இப்போது புரிவதாகவும் கூறியுள்ளார்.

கணிசமான கொலை வழக்குகளில் எதிரி ஒரு மனநோயாளி என்று இறுதியில் தீர்ப்பு வழங்கப்படுவது போல, விமானத்தை வேண்டுமென்றே மலையுடன் மோதிய அந்திரியாஸ் ஒரு மனநோயாளி என்று கதை முடியப்போகிறதா!

'ஒருநாள்' தனது பெயர் பிரபல்யமாக வேண்டுமென்ற ஒரு மனநோயாளியின்(?) ஆசைக்கு, 149 அப்பாவிகளின் உயிர்களா பலியாக வேண்டும்?

நித்தமும் பல நூறு உயிர்களுக்குப் பொறுப்பான விமானி ஒருவர் மனநோய் சிகிச்சை பெற்று வந்தவரென்றால், பொறுப்பு வாய்ந்த அவரது மருத்துவரும், விடயமறிந்த அவரது முன்னாள் காதலியும் இதனை உரிய அதிகாரிகளின் கவனத்துக்கு ஏன் முன்னரே தெரியப்படுத்தவில்லை?

அந்திரியாஸின் சகபாடிகளுக்குக்கூடவா அவர் ஒரு மனநோயாளி என்பது இறுதிவரை தெரியாமலிருந்தது?

விசாரணைகள் இந்தத் திசைகளுக்கும் திருப்பப்பட வேண்டும்!

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடிய பிரஜாவுரிமைக்கு விண்ணப்பம் செய்வோர் பெருமளவு வீழ்ச்சி!

# Canada faces dramatic drop in Citizenship

கனடியப் பிரஜாவுரிமை பெறும் குடிவரவாளர்களின் தொகை கடந்த சில வருடங்களில் பெரும் வீழ்ச்சி கண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2000ம் ஆண்டிலிருந்து 2008ம் ஆண்டுக்குள் கனடாவில் குடியேறியவர்கள் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்த எண்ணிக்கை 79 வீதத்திலிருந்து 26 வீதமாகக் குறைந்துள்ளதாக புள்ளிவிபரம் காட்டுகின்றது.

கனடிய பிரஜாவுரிமைச் சட்டத்தில் சீர்திருத்தம் என்ற பெயரில் அடுத்தடுத்துக் கொண்டுவரப்பட்ட பாரிய மாற்றங்களே இதற்கான காரணமென்று இத்துறைசார் பிரமுகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முக்கியமாக, பிரஜாவுரிமைக்கான பரீட்சை கடுமையாக்கப்பட்டிருத்தல், விண்ணப்பக் கட்டண அதிகரிப்பு, கனடாவில் தங்கியிருக்க வேண்டிய கட்டாய காலம் போன்றவை இப்போது புதிய விண்ணப்பதாரிகளுக்குத் தடையாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவில் குடியேறியவர்கள் கனடிய வாழ்க்கையில் இணைவதற்கு ஒரு படிக்கல்லாகவிருந்த கனடிய பிரஜாவுரிமை தற்போது அதற்கான தடைக்கலாக மாறியுள்ளதாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

கனடிய பிரஜாவுரிமைப் பரீட்சையில் முன்னர் 60 புள்ளிகள் பெற்றால் போதுமானதாகவிருந்தது. இப்போது 75 ஆக இது அதிகரிக்கப்பட்டுள்ளது.

பிரஜாவுரிமை விண்ணப்பக் கட்டணம் நூறு டாலரிலிருந்து 300 டாலராகக் கடந்த வருடம் பெப்ரவரியில் அதிகரிக்கப்பட்டு, பின்னர் டிசம்பரில் 530 டாலராக அதிகரிக்கப்பட்டது. இதனைவிட, பிரஜாவுரிமைச் சான்றிதழைப்பெற மேலும் 100 டாலர் செலுத்த வேண்டும்.

கனடிய தேர்தல்களில் வேட்பாளராகவும் வாக்காளராகவும் பங்களிப்பது, கனடிய கடவுச்சீட்டுப் பெறுவது போன்றவை கனடியப் பிரஜாவுரிமையால் ஒருவருக்குக் கிடைக்கின்ற அனுகூலங்கள்.

# குடிவரவாளர்களின் தனிப்பட்ட தகவல்களை மற்றைய அரச நிறுவனங்களுக்குப் பகிரும் புதிய சட்டம் தயாராகிறது

# New law to let Canadian officials share Immigrants' Personal Information

கனடாவிலுள்ள நிரந்தரக் குடிவரவாளர்கள் மற்றும் கனடியப் பிரஜைகளின் தனிப்பட்ட தகவல்களை குடிவரவுத்துறை அதிகாரிகள் இங்குள்ள மற்றைய கனடிய அரசாங்க நிறுவனங்களிலிருந்து பெறுவதற்கு அதிகாரமளிக்கும் புதிய சட்டமொன்று தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது.

'தகவல் பரிமாற்றம்' என்ற பெயரிலான இந்தப் புதிய சட்டத்தின் சில அம்சங்கள் கடந்த மாதம் வெளியிடப்பட்டன. இதன் பிரகாரம், கனடிய எல்லைப்புற திணைக்களம், வேலைவாய்ப்பு மற்றும் சமூக அபிவிருத்தி இலாகா, கனடிய வருமானவரித்துறை, ஆர். சி. எம். பி எனப்படும் கனடிய மத்திய காவற்துறை, குடிவரவு ஆலோசகர்களாகப் பணியாற்றுபவர்களைக் கண்காணிக்கும் நிறுவனம், மற்றும் மத்திய-மாகாண அரச நிறுவனங்களிலிருந்து கனடிய குடிவரவு அதிகாரிகள் தகவல்களைப் பெற புதிய சட்டம் அனுமதி வழங்கும்.

Immigration officials would be given access to permanent resident's and citizen's personal information from other government agencies for enforcement purposes under Ottawa's proposed changes to the laws. The plan, published last month, would allow information sharing between border enforcement officials, Employment and Social Development Canada, Canada Revenue Agency, the RCMP and the regulator of immigration consultants, as well as of other federal and provincial bodies.

சில விடயங்களில் கனடிய குடிவரவு மற்றும் பிரஜாவுரிமைத் திணைக்களம் சரியான தரவுகளையும் தகவல்களையும் பெறுவதற்கு மற்றைய அரசாங்க நிறுவனங்களுடன் ஒரு ஆள் பற்றிய தனிப்பட்ட தகவல்களைச் சேகரிக்க வேண்டியுள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள நடைமுறையில் 'தனிநபர் பாதுகாப்புச் சட்ட' அடிப்படையில் ஒருவர் பற்றிய தகவல்களை இன்னொரு திணைக்களத்திடமிருந்து பெறுவதில் கனடிய குடிவரவுத் திணைக்களம் சில சங்கடங்களைச் சந்தித்து வருகின்றது.

புதிய திட்டத்தின் அடிப்படையில், வருமானவரித் திணைக்களம் புதிய சட்ட அமுலின் முக்கிய தகவல் பரிமாற்றத்தில் பிரதான இடத்தை வகிக்கும். ஒருவரது வருமானம் பற்றிய தகவல்களை அறிவது, பொய்யான தகவல்கள் மற்றும் மோசடி போன்றவற்றைக் கண்டுபிடிப்பது, குடிவரவு மற்றும் பிரஜாவுரிமை தொடர்பான விண்ணப்பங்களில் காணப்படும் மாறுபாடுகளைக் கண்டறிவது ஆகியவற்றுக்கு வருமானவரித் திணைக்களத்துடனான 'தகவல் பரிமாற்றம்' உதவுமென நம்பப்படுகின்றது.

According to the plan, the revenue agency would play a key role in the new information regime as the changes would let immigration authorities access the secure Income Verification Program as a source to identify 'possible false representation, fraud, concealment of material circumstances, or discrepancies' provided by immigration and citizenship applicants.

கனடிய அரசாங்கம் அண்மைக் காலங்களில் பெற்றோர் மற்றும் குடும்ப உறவினர்கள் ஸ்பொன்சர் நடைமுறை, விசா வழங்கும் நடைமுறை, பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்கும் தகுதிகள் போன்றவற்றில் ஏற்படுத்திய மாற்றிறங்களில் ஏற்படக்கூடிய தவறுகள், மோசடிகள் போன்றவற்றை புதிய 'தகவல் பரிமாற்றத்' திட்டம் வெகுவாகக் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

எஸ்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

ஒன்ராறியோ மாகாண குடியிருப்பாளர்கள் அடுத்த வருடத்தில் சராசரியாக 120 டாலர்களை அதிகரித்த மின் கட்டணமாக செலுத்த வேண்டியிருக்கும். மாதமொன்றுக்குச் சராசரியாக பத்து டாலர்கள் வரையில் 2016 ஜனவரியில் மின்கட்டணம் அதிகரிக்குமென்று அறிவித்துள்ள ஒன்ராறியோ சக்திவள அமைச்சர் பொப் சியாரெலி, குறைந்த வருமானமுள்ள குடும்பங்களுக்குக் சலுகை வழங்க ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஒன்ராறியோ மாகாணத்தின் ஒரு மணித்தியாலத்துக்கான குறைந்த பட்ச ஊதியம் 25 சதத்தினால் உயர்த்தப்பட்டுள்ளது. எதிர்வரும் அக்டோபர் முதலாம் திகதி இந்த ஊதிய அதிகரிப்பு நடைமுறைக்கு வரும். தற்போது மணித்தியாலத்துக்கு பதினொரு டாலர்களாகவிருக்கும் ஊதியம், அக்டோபரிலிருந்து பதினொரு டாலர் இருபத்தைந்து சதமாக அதிகரிக்கும். ஊதிய நிர்ணயம் தொடர்பான ஆலோசனைக் குழு கடந்த வருடமே இந்த ஊதிய அதிகரிப்பைச் சிபார்சு செய்திருந்தது.

கனடிய வருமானவரித் திணைக்களம் மற்றும் பிரதான கனடிய வங்கிகளின் பெயர்களில் வரும் மின்னஞ்சல்கள், குறுந்தகவல்களையிட்டுப் பொதுமக்களை விழிப்பாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. உண்மையானதும் நம்பகரமானதும் போன்று காணப்படும் இவை பொதுமக்களின் தனிப்பட்டதும் அந்தரங்கமானதுமான தகவல்களைப் பெற்று, அவர்களின் வங்கிக் கணக்குகளில் மோசடி செய்யும் நோக்கம் கொண்டவையாக இருப்பதாகவும் வருமானவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கனடாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே விமான வழியாக மேற்கொள்ளப்படும் பயணங்களுக்குரிய சுங்கப் பரிசோதனை நடைமுறைகளை, வீதிகள் வழியாகவும் கடல் வழியாகவும் மேற்கொள்ளப்படும் இரு நாட்டுப் பயணங்களுக்கும் விஸ்தரிக்க இரு நாடுகளும் இணக்கம் கண்டுள்ளன. இதன்படி, இரு நாடுகளின் சோதனைக் கடவைகளிலும் இரு நாடுகளின் சுங்கத் திணைக்கள அதிகாரிகளும் சம காலத்தில் கடமையாற்ற அனுமதிக்கப்படுவது முக்கியமானதாகும்.

பாலியல் வன்முறைகள், பாலியல் தொந்தரவுகளை ஆகியவற்றைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளுக்கென ஒன்ராறியோ மாகாண அரசாங்கம் 40 மில்லியன்களுக்கும் அதிகமான நிதியைச் செலவிடவுள்ளது. இது தொடர்பான சட்ட மூலமொன்றைக் கொண்டு வருவது பற்றி மாகாண முதல்வர் கத்லின் வின் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார். சி.பி.சி வானொலி நிலைய பணியாளர் ஒருவர் தொடர்பான பாலியல் வன்முறைகள் அண்மையில் அம்பலமானதே இந்நடவடிக்கைக்கான முக்கிய காரணம்.

கனடியப் பிரஜாவுரிமைப் பிரமாணத்தில் மகாராணிக்கு விசுவாசம் தெரிவிக்கும் வாசகங்களை நீக்குமாறு மூன்று கனடியக் குடியிருப்பாளர்கள் தாக்கல் செய்த மனுவை, கனடிய உச்ச நீதிமன்றம் விசாரணை செய்ய மறுத்துவிட்டது. தங்களுக்கான பிரமாணத்திலிருந்து இந்த வாசகங்களை நீக்குமாறு கோரியே தனித்தனியாக இவர்கள் மனுவைத் தாக்கல் செய்திருந்தனர். இதனை விசாரணை செய்ய மறுத்தமைக்கான காரணத்தை உச்ச நீதிமன்றம் வெளியிடவில்லை.

கனடாவின் அறுபது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த வருடத்தில் வெளிநாடுகளுக்கான 86 பயணங்களை வெவ்வேறு அமைப்புகள், நிறுவனங்கள் வழங்கிய நிதியுதவியைப் பயன்படுத்தி மேற்கொண்டுள்ளனரென்ற தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் பயணங்களுக்கு செலவிடப்பட்ட மொத்தமான பணம் 442,524 டாலர்கள். மூன்று பிரதான கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த பயணப் பட்டியலில் அடங்குகின்றனர்.

## உலகக் கிண்ணத்தை ஆஸ்திரேலியா ஐந்தாவது தடவையாக வென்றது!

கிரிக்கெட் போட்டியின் உலகக் கிண்ணத்தை ஐந்தாவது தடவையாகவும் வென்று ஆஸ்திரேலிய அணி சாதனை படைத்துள்ளது. கடந்த 29ம் திகதி இறுதிப் போட்டி மெல்போர்ன் மைதானத்தில் ஆஸ்திரேலிய அணிக்கும் நியுசிலாந்து அணிக்குமிடையில் இடம்பெற்றது.

முதலில் களமிறங்கி ஆடிய நியுஸிலாந்து அணி 45 ஓவர்களில் சகல விக்கட்டுகளை-யும் இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது. அடுத்து விளையாடிய ஆஸ்திரேலிய அணி 33.1 ஓவர்களில் மூன்று விக்கட்டுகள் இழப்புக்கு 186 ஓட்டங்களைப் பெற்று ஏழு விக்கட்டுகளால் உலக சாம்பியன் பட்டத்தைப் பெற்றது.

ஆட்ட நாயகனாக ஜேம்ஸ் பால்க்னர் தெரிவானார். உலகக் கிண்ண போட்டித் தொடரில் 22 விக்கட்டுகளை வீழ்த்திய மிக்கேல் ஸ்ரார்க் போட்டித் தொடரின் சிறப்பாட்டக்காரராகத் தெரிவானார். இந்த உலகக் கிண்ண இறுதிப் போட்டியுடன் ஆஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் ஒருநாள் போட்டியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த உலகக் கிண்ண முன்னைய போட்டிகளின் சாதனைகள் தொடர்பான கட்டுரை 27ஆம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளது.

## ரொறன்ரோவின் புதிய பொலிஸ்மா அதிபர் போட்டியில் இருவர்

ரொறன்ரோவில் தற்போது பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றும் பில் பிளெயர் இந்த மாதத்துடன் ஓய்வுபெறவுள்ளார். இவரது இடத்துக்கு நியமனம் பெறுவதற்கான தெரிவில் தற்போது பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாகப் பணியாற்றும் மார்க் சான்டஸ் (52), பீட்டர் ஸ்ரோலி (48) ஆகிய இருவரும் முன்னணியில் உள்ளனர். இவர்கள் இருவருமே ஜமெய்க்கா நாட்டினை பின்னணியாகக் கொண்ட சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். 1980ம் ஆண்டில் பொலிஸ் கான்ஸ்டபிள்களாக ரொறன்ரோ பொலிஸ் சேவையில் இணைந்த இவர்கள், படிப்படியாக சேவை மூப்பு அடிப்படையில் முன்னேறி கடந்த சில வருடங்களாக ரொறன்ரோவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# TNA, TNPF politicians address press conference in Geneva

Northern provincial councillors Ananthy Sasitharan, M.K. Shivajilingam and TNPF Leader Gajendrakumar Ponnambalam addressed the press at the Geneva Press Club on Tuesday, briefing the audience on the various aspects of the structural genocide targeting the Eezham Tamil nation, which continued unabated despite the internationally orchestrated 'regime change' hatching Maithriplala Sirisena as the SL president.

The Tamil politicians from the homeland also said that the procrastination in delivering justice to Tamils on the part of the international community in the deferral of the OISL report only emboldened the Sri Lankan State in its crimes against Tamils. Human rights activist and one of the judges in the People's Tribunal on Sri Lanka, Maung Zarini also addressed the audience together with Tamil diaspora activists Sivakami Rajamanoharan from the UK and R Sri Ranjan from Canada.

NPC councillor Mrs Ananthy Sasitharan speaking on various aspects of the structural genocide stated that the Sri Lankan military has taken a large number of Tamil children secretly through Oamanthai checkpost in Vavuniyaa to the Sinhala South in the past. These underage youth have been subjected to intense assimilation programs by the SL State, she said. They have been indoctrinated with Sinhala language and converted to Buddhism. Tamil families are not able to locate their children, she said.

The councillor also raised the plight of the thousands of Tamil political prisoners languishing in unlawful detention throughout the island and subjected to torture and sexual violence from the Sinhala guards and inmates.

Mrs. Sasitharan concluded by saying "to explain the various issues faced by our people, a few minutes given here will not be sufficient, it demands days to articulate upon the various aspects of the structural genocide against the Tamils."

NPC councillor Mr Shivajilingam presented the NPC resolution on Genocide, and quoted from it regarding the role of Maithripala Sirisena as acting defence minister during the final weeks of the genocidal war. Likewise, one of the main accused for Genocide, former Army commander Sarath Fonseka has been installed as advisor on defence to the new regime, he said.

TNPF leader Gajendrakumar Ponnampalam spoke on the political ideology behind the SL State enacted genocide targeting the Eezham Tamil nation. If one does not properly understand the context in which these acts are being committed, it will be difficult for outsiders to comprehend that the SL state is actually carrying out a protracted genocide, he said.

Mr. Ponnambalam explained that the Sinhala elite, and by extension the Sinhala people at large, subscribe to the Mahavamsa doctrine, which forms the basis of the Sinhala-Buddhist nationalist ideology, which is adopted by the SL State. This doctrine has been motivating and legitimizing violence against the national characteristics of the Tamil nation, he said.

He also reiterated that Tamil nationhood and the facilitation of Tamils right to Self-determination were the basis to find a political solution to the Tamil national question and to arrest the ongoing structural genocide. Illuminating the Sinhala leadership intransigence in accommodating Tami rights and justice, he pointed out how the new regime promised to protect the military and the previous heads of state, responsible for systematic crimes against Tamils, in order to retain political power among the Sinhala people.

The TNPF leader questioned the wisdom of the deferral of the OISL report till September and said it will only aid Sri Lankan in giving time and space in carrying out its genocidal project. The UN Establishment has borrowed the prism of the Sinhala population in the South in the interpretation of the so-called positive climate following the regime change.

If the international community is committed as they claim in delivering political and legal justice to the Eezham Tamils, then an international independent investigation into the crimes of genocide, war crimes and crimes against humanity should be initiated without delay, he said.

Moreover to allow the Tamils to practice their historical self-determination and their earned sovereignty, a referendum on Tamil nationhood and political future should be initiated without delay, he said. Dr Maung Zarini replying to question from the press elucidated the linkages between Sinhala nationalism, Buddhism and the SL State in indoctrinating the genocidal intent against Eelam Tamils through controlling the public opinion in the South.

He drew on parallels between the Burmese state, Arakine, Rakhine and Bamar Buddhist (the Burmese Buddhist nation) and the Sri Lankan State and Sinhala Buddhists in pursuing genocidal projects to create a Buddhist nation through exterminating or silencing Eezham Tamils and the Rohinyga Muslims.

**(Courtesy: Tamilnet, March 18, 2015)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# நீரிழிவு நோயாளர்களின் நரம்புப் பாதிப்புகள்

அடிக் காலைத் தூக்கியபடி "இஞ்சை பாருங்கோ' காலிலை ஒரு புண்" என்று சொல்லியவர் திடீரென்று கதிரையிலிருந்து பதகளித்து எழுந்தார்.

"ஒரு கால் செருப்பைக் காணவில்லை எங்கை விழுந்துதோ தெரியவில்லை" என்றார்.
"வயிறு எந்த நேரமும் ஊதலாகக் கிடக்குது. சாப்பிட முடியவில்லை. ஓங்காளமாகக் கிடக்கு" என்றார் மற்றொருவர். இவரது பிரச்சனை உணவு சமியாப்பாட்டால் ஏற்பட்டது அல்ல.
"ஐயாவாலை இப்ப தானாய் எழும்ப முடியவில்லை. நாங்கள் தான் தூக்கிவிட வேண்டும். சரியான பாரம் என்னால் முடியவில்லை" இவர் எழும்ப முடியாததற்குக் காரணம் அவரது அதீத எடையோ வயசின் தளர்ச்சியோ காரணம் அல்ல.

அவர்கள் அனைவரது பிரச்சனைகளுக்கும் அடிப்படைக் காரணம் நீரிழிவு நோய் தான். நீரிழிவு நோயால் நரம்புகள் சேதமடைந்தவர்கள். ஆனால் வெளித் தோற்றத்தில் எந்தவித மாற்றங்களும் அவர்களில் தென்படுவதில்லை. சேதமடைந்தவை ஒரே விதமான நரம்புகள் அல்ல. வேறு வேறு வகைப்பட்ட நரம்புகள் ஆகும்.

நீரிழிவு நோயாளிகளில் 60 முதல் 70 சதவிகிதமானவர்களுக்கு ஏதாவது ஒரு அளவில் நரம்பு சேதமடைந்து இருப்பதாக சொல்லப்படுகிறது. சிலரில் பாதிப்பின் அளவு குறைவாக இருக்கும் சிலரில் அதிகமாக இருக்கும். இன்னும் சிலரில் பாதிப்புகள் இருந்தபோதும் வெளிப்படையாக அறிகுறிகள் அவர்களுக்குத் தென்படாது இருக்கவும் கூடும்.

நரம்புப் பாதிப்பு என்றால் கை கால்களில் விறைப்பு, எரிவு, விறுவிறுப்பு, வலி என்பன என்றுதான் நாம் எண்ணுகிறோம். ஆனால் முக்கிய உறுப்புகளான இருதயம், உணவுக் கால்வாய், பால் உறுப்புகள் போன்றவற்றிலும் நரம்புகள் பாதிக்கப்படலாம் என்பதைப் பெரும்பாலனவர்கள் அறிந்திருப்பதில்லை.
நீரிழிவு உள்ள அனைவருமே பாதிக்கப்படக் கூடுமாயினும் வயதானவர்களிலும், நீண்டகாலமாக நீரிழிவு நோய் இருப்பவர்களிலும், நீரிழிவு நோயை சரியாகக் கட்டுப்பாட்டில் வைத்திருக்காதவர்களுக்கும் வருவதற்கான சாத்தியம் மிக அதிகமாகும். இரத்தத்தில் கொலஸ்டரோல் அதிகமாக உள்ளவர்களும், குண்டான எடை உள்ளவர்களும் நரம்புப் பாதிப்பிற்கு ஆளாவது அதிகமாகும். அதேபோல உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களும் கூடுதலாகப் பாதிக்கப்படுவார்கள்.

அறிகுறிகள் பலவகைப்படும். எந்த நரம்புகள் பாதிக்கப்பட்டுள்ளன என்பதைப் பொறுத்து அறிகுறிகள் மாறுபடும். குளிர், சூடு, தொடுகை உணர்வு போன்றவற்றை எங்களால் உணரச் செய்பவை உணர்வு நரம்புத் தொகுதி (sensory nervous system) ஆகும். இருதயம், உணவுக் கால்வாய் சிறுநீர்த் தொகுதி போன்ற உள்ளுறுப்புகளில் பாதிப்பை ஏற்படுத்துபவை (autonomic nervous system) தன்னிச்சை நரம்புத் தொகுதி ஆகும். கை கால்கள் போன்றவற்றை இயங்கவைப்பதற்கான தசைத் தொகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்துபவை (motor nervous system) இயக்கி நரம்புத் தொகுதி ஆகும்.

பெரும்பாலான நீரிழிவு நோயாளிகளிடம் காணப்படும் நரம்புப் பாதிப்பு இதுவே ஆகும். கால்கள், பாதம், கைகள், உள்ளங்கை புறங்கை விரல்கள் போன்றவற்றில் வலி, எரிவு, உணர்வு குறைதல் போன்ற அறிகுறிகளாக வெளிப்படும். அந்தப் பகுதிகளில் வலி, வெப்பம், தொடுகை போன்றவற்றை குறைவாகவோ அல்லது முற்றாகவோ நோயாளியால் உணர முடியாதிருக்கும்.

அந்தப் பகுதிகளில் எரிவு, குத்துவது போன்ற உணர்வு, நமைச்சல் போன்ற வேதனைகள் ஏற்படலாம். சேற்றில் கால் வைத்தது போலிருக்கிறது என்று ஒரு நோயாளி குறிப்பட்டார். இத்தகைய அறிகுறிகள் யாவும் நோயாளியால் மட்டுமே உணரக் கூடியவை. மருத்துவரோ அல்லது உறவினர்களோ காண முடியாத உணர்வுகளாகும்.

சிலரில் சுரீரெனக் குத்துவது போன்ற கடும் வலி ஏற்படலாம். வேறு சிலரில் தசைப்பிடிப்பு அல்லது குறண்டல் போன்ற அறிகுறிகளும் தோன்றும். இத்தகைய நரம்பு வேதனைகள் இரவு நேரத்தில் அதிகமாகத் தெரியும்.

இதற்கு எதிர்மாறாக உணர்வு அதீதமாக இருப்பதும் உண்டு. சாதாரணமான சருமத்தில் தொடுகை கூட கடும் வேதனையை அவர்களில் ஏற்படுத்தலாம்.

பாதங்கள் கால் போன்றவற்றில் உணர்வு குறைவதால் சமநிலை பாதிப்படைவதும் உண்டு. உணர்வு தெரிவது குறைவதால் தசைகளின் இயக்கத்தில் தளர்வு ஏற்படலாம். இதனால் தசைநார்கள் பலம் இழப்பதுடன் அவை தளர்ச்சியடையவும் கூடும். இதனால் பாதம் கணுக்கால் மற்றும் விரல்களின் மூட்டுகள் பலமிழக்கலாம்.

முள் குத்துவது, செருப்பு சப்பாத்து போன்ற காலணிகள் வெட்டுவது போன்றவை காலிலுள்ள விறைப்புத் தன்மையால் பாதிப்புற்றவர்களுக்குத் தெரிவதில்லை. அதேபோல புண்கள் சீழ்பிடித்தாலும் வலி தெரிவதில்லை. இதனால் புண்கள் பெருகி, அழுகக் கூடும். பல நீரிழிவு நோயாளர்களின் விரல்கள், கால் போன்றவற்றை சத்திரசிகிச்சையால் அகற்ற நேர்வது இதனால்தான்.

தன்னிச்சை நரம்புத் தொகுதி சேதமுறுவதால் இருதயம், சுவாசத் தொகுதி, உணவுக் கால்வாய், சிறுநீர்த் தொகுதி போன்ற உள்ளுறுப்புகளில் பாதிப்புகள் ஏற்படும். இதனால் பிரஷர், குருதிச் சீனியின் கட்டுப்பாடு போன்றவற்றில் சிக்கல்கள் ஏற்படலாம்.

குருதிச் சீனியின் அளவானது மிகக் குறையும் போது (below 70 mg/dL) வியர்வை, பதற்றம், அமைதியின்மை

(28ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# அத்தனை கஷ்டம்

என் நண்பர் ஒருவருக்கு சமீபத்தில் இலங்கையிலிருந்து ஒரு கடிதம் வந்தது. எழுதியவர் கனடாவுக்கு அகதியாக வந்து அகதிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டவர். அவர் கடிதம் இப்படிப் போனது.

புகைப்படம் எடுக்கப் போனேன்
கடை பூட்டியிருந்தது
மறுபடியும் எடுத்து
கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்தேன்.
விண்ணப்பம் தொலைந்தது.
மீண்டும் அனுப்பி
கடவுச்சீட்டு கிடைத்தது.
விமான டிக்கட் காசுக்கு
கல்லுடைத்தேன், களவெடுத்தேன், கடன் வாங்கினேன்.
நாலு நாடுகளுக்கு விண்ணப்பித்து
ஒரு நாட்டுக்கு விசா கிடைத்தது.
விமானத்தில் ஏறி
புதுநாடு வந்தேன்.
அகதிக் கோரிக்கை போராட்டம்
மூன்று வருடம் தொடர்ந்தது.
விட்டு வந்த நாட்டுக்கு
என்னை திருப்பி அனுப்பினார்கள்.
ஓ, அகதியாவது எத்தனை கஷ்டம்.
அகதியாகாமல் வாழ்வது
அதனிலும் கஷ்டம்.

இதை படித்தபோது அகநானூறு பாடல் ஒன்று நினைவுக்கு வந்தது.
அகநானூறு 122, பரணர் – தலைவி தோழியிடம் சொன்னது.

இரும்பிழி மாரி அழுங்கல் மூதூர்
விழவு இன்றாயினும் துஞ்சாது ஆகும்
மல்லல் ஆவணம் மறுகுடன் மடியின்
வல் உரைக் கடும் சொல் அன்னை துஞ்சாள்
பிணி கோள் அரும் சிறை அன்னை துஞ்சின்
துஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர்
இலங்கு வேல் இளையர் துஞ்சின் வை எயிற்று
வலம் சுரித் தோகை ஞாளி மகிழும்
அரவ வாய் ஞமலி மகிழாது மடியின்
பகலுரு உறழ நிலவுக் கான்று விசும்பின்
அகல் வாய் மண்டிலம் நின்று விரியும்மே
திங்கள் கல் சேர்வு கனை இருள் மடியின்
இல் எலி வல்சி வல் வாய்க் கூகை
கழுது வழங்கு யாமத்து அழிதகக் குழறும்
வளைக் கண் சேவல் வாளாது மடியின்
மனைச் செறி கோழி மாண் குரல் இயம்பும்
எல்லாம் மடிந்த காலை ஒரு நாள்
நில்லா நெஞ்சத்து அவர் வாரலரே அதனால்
அரி பெய் புட்டில் ஆர்ப்பப் பரி சிறந்து
ஆதி போகிய பாய் பரி நன் மா
நொச்சி வேலித் தித்தன் உறந்தைக்
கல் முதிர் புறங்காட்டன்ன
பல் முட்டின்றால் தோழி நம் களவே.

திருவிழாக்கள் இல்லாதபோதுகூட
இந்த ஊர் உறங்குவதில்லை.
தெருக்கள் அமைதியடைந்தாலும்
சுடுசொல்கூறும் அம்மா உறங்குவதில்லை.
அம்மா உறங்கினாலும்
ஊர் காவலர்கள் உறங்குவதில்லை
காவலர்கள் உறங்கினாலும்
கூர்பல் நாய்கள்
குரைப்பதை நிறுத்துவதில்லை.
நாய்கள் உறங்கினாலும்
சந்திரன் இரவை பகலாக்கிவிடுகிறான்
சந்திரன் மறைந்தாலும்
கோட்டான்கள் கூவுவதை நிறுத்துவதில்லை
அவை கூவலை நிறுத்தினாலும்
கோழிகள் கூவத் தொடங்கிவிடுகின்றன
அப்படி அனைவரும் தூங்கினாலும்
அவனோ வரப்போவதில்லை
காடு சூழ்ந்த அரசனின்
கோட்டைபோல
இந்த ஊர்
அத்தனை தடைகளை கொண்டிருக்கிறதே.

ஆதியிலிருந்து இன்றுவரை மனிதனை கஷ்டங்கள் சூழ்வது ஒன்றும் புதுமையானதாக இல்லை. அந்த ஒற்றுமைதான் வியப்பாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்

# மனமே! நலமா?

50

இன்று எவரைப் பார்த்தாலும் அமைதியில்லா மனத்துடனே அலைந்து கொண்டிருப்பதனையே காண முடிகிறது. கவிஞர் கண்ணதாசன் இவ் அமைதி பற்றி எழுதிய பாடல் நினைவுக்கு வருகிறது.

"அமைதியான நதியினிலே ஓடும் – ஓடம்
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்"

இந்த இரண்டு வரிகளுக்கு மிக அருமையான உதாரணத்துடன் மனதைப் பற்றிக் கூறுவது எவ்வளவு பொருத்தமாக உள்ளது. மன அமைதி (The peaceful mind) பற்றி எத்தனையோ பிரசங்கங்களைக் கேட்டு வருகிறோம். அந்தப் பேச்சு கேட்கும் மட்டுமே அமைதியாக இருக்கிறோம். வெளியே வந்தால் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிவிடுகிறது. எத்தனையோ குரோத உணர்ச்சி, பழிவாங்கும் எண்ணம், கணக்கிட முடியாத பொறாமை என்று பல எதிர்மாறான எண்ணங்கள் எமக்குள் புகுந்து விடுகின்றன. இதிலிருந்து எம்மால் விடுபட முடியவில்லை என்றால் அமைதியாக வாழவே முடியாது. ஒருவரது உடல் செயற்பாடுகளிலிருந்து வேறுபாடாக செயற்படுவதே மனமாகும். (A person's mental process contrasted with physical nation) என்பதே உண்மையாகும்.

வேலை, பணம், உடல்நலம், பெற்றோர், பிள்ளைகள், மனைவி என்போரைப் பற்றியே எந்த நேரமும் கவலை கொள்கிறோம். இதிலிருந்து விடுபட பல முறைகளைக் கையாண்டு பார்க்கலாம். சுயவிழிப்புணர்வு (self awareness) முதலில் வேண்டும். எல்லாம் தெரிந்துள்ளேன் எனவும், அதுபற்றி அலட்டிக் கொள்ளத் தேவையில்லை எனவும் உணர்கிறோம். உண்மையில் மன அமைதிக்கு முதற்படி இதுவேயாகும். அடுத்து பதற்றம் அடையாமல் பார்த்துக் கொள்வது அவசியம். பலர் நடக்க முடியாத பலதை எண்ணி பெருமூச்சு விடுகிறோம். உண்மையில் நம்பிக்கையோடு எழுந்து நின்றால் அதுவே போதும். மனமும் உடலும் ஒன்றுக்கு ஒன்று உதவுகிறது. எனவே உணர்வுள்ள முறையில் எமது சுவாசம் ஏற்பட வேண்டும். எனவே மூச்சு விடுவதிலும் ஒரு ஒழுங்கும் அமைதியும் வேண்டும். பிரணாயாமம் என்னும் யோகப் பயிற்சியின் முக்கியத்துவமே மூச்சுப் பயிற்சியாகும் (Relaxed breathing). அமைதியான சிந்தனைகள் (Calming thoughts) மிகவும் முக்கியமானவை. எவ்வகையில் செயற்படப் போகிறேன் என்பதனை மிகவும் அமைதியாக சிந்திக்க வேண்டும். நாம் சிலவேளைகளில் கோபப்பட்டு அத்துமீறிப் பேசுபவர்களை 'calm down' என்று கூறுவது போன்றதே இது. மற்றவர்களுக்கு மட்டுமல்ல எமக்கும் தேவையான உணர்வு இதுவேதான். அடுத்ததாக செயற்பாட்டினை அதிகரிப்பு (increase activity) செய்ய வேண்டும். எந்த ஒரு பிரச்சனையையும் விடுவிக்க முதலில் ஒரு பதிலை தேட வேண்டும். ஒரே நேரத்தில் பல பதில்களை தேட முற்பட்டால் பதற்றமே மிஞ்சும். இதனை எழுதிக்கூட பார்க்கலாம். இல்லாதுவிடில் மீண்டும் பழைய நிலைக்கே திரும்ப நேரிடும்.

இறுதியாக நித்திரை திறமைகள் (sleeping skills) பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். சிந்திக்கும் இடமாக படுக்கையை மாற்றாது அமைதியான மனத்துடனேயே படுக்கைக்கு செல்ல வேண்டும்.
நித்திரையின்மையால் பல பிரச்சனைகள் எழலாம். 65 வயதுக்கு மேற்பட்டவர்களில் 12 – 40 வீதமானவர்கள் நித்திரையின்மை (insomnia) யால் தவிக்கின்றனர். நித்திரை வந்தால் மட்டுமே படுக்கலாம். அடிக்கடி நேரத்தினை பார்க்க வேண்டாம். அறையை நல்ல இருளில் வைக்க வேண்டும். வைத்தியரைவிட நாமே இதற்கு வழி தேடலாம். எல்லாமே எமது மன அமைதிக்கான வழிகளாகும்.

தூக்கம் உன் கண்களைத் தழுவட்டுமே'

மீண்டும் சந்திப்பேன்.

## விமான ஓட்டி அறையில் இருவர் கட்டாயம்

ஜேர்மன்விங்ஸ் விமானம் ஆல்ப்ஸ் மலைத்தொடரில் மோதவைக்கப்பட்ட சம்பவத்தையடுத்து கனடிய விமானத்துறை புதிய நிபந்தனையொன்றைக் கட்டயமாக்கியுள்ளது. இதன்படி, எப்போதும் விமான ஓட்டியின் அறைக்குள் ஒரு விமான ஓட்டி தனியாக இருக்க அனுமதிக்கப்பட மாட்டாது. அவருடன் விமானச் சிப்பந்தி எவராவது ஒருவர் கட்டாயமாக அறைக்குள் இருக்க வேண்டும். ஏயர் கனடா, ஏயர் ட்ரான்சற் ஆகிய இரண்டு விமனான நிறுவனங்களும் இந்த நிபந்தனையை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளன.

## வடஅமெரிக்காவின் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட முதலாவது வைத்தியசாலை

வடஅமெரிக்காவின் முதலாவது டிஜிட்டல் மயமாக்கப்பட்ட வைத்தசாலையாக ஹம்பர்றிவர் வைத்தியசாலை அமைந்துள்ளது. இதற்கு தமது தந்தையின் ஞாபகார்த்தமாக ரொறன்ரோ நகரசபை உறுப்பினராகவிருந்த டக் ஃபோர்ட் குடும்பம் 90,000 டாலர்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

## ஒன்ராறியோவின்..

செயலாகும். ஏனெனில் இதில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு முன்கூட்டியே கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், வகுப்புகள், உதவிகள் எல்லாவற்றையும் கல்வி அமைச்சு வழங்கியிருக்கும். ஆகவே இவர்கள் மிகவும் நாசூக்காகவும், அவதானமாகவும் கற்பிப்பார்கள். அத்துடன் இவ்வகுப்புகளுக்குப் போகாத மாணவர்கள் தங்கள் சக மாணவர்கள் மூலம் தப்பான விளக்கங்களைப் பெற வாய்ப்புண்டு. புதிதாக எந்தவொரு பாடவிதானத்தை ஆரம்பிக்கும் பொழுதும் பிரச்சனைகள் ஏற்படுவது சகஜம். ஆனால் காலப்போக்கில் பல திருத்தங்களும், மாற்றங்களும் ஏற்பட இடமுண்டு. காலம் மாறிவிட்டது, சமூக விழுமியங்கள் மாறிவிட்டன. தொழில்நுட்பம் வீட்டுக்குள்ளேயே பயங்கரங்களை கொண்டு வந்து சேர்க்கிறது. பாடவிதானத்தை கல்விச் சபை வழங்கினாலும், பெறுமானங்களையும் (values) வரையறைகளையும், குடும்பங்கள்தான் வழங்க வேண்டும்.

ஆகவே பெற்றோர் அவதானமாக பிள்ளைகளை கண்காணித்தல் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகேஸ்வரி நடராஜா

# ஒன்ராறியோவின் பால் இயல் கல்வி பாடவிதானம்

# Ontario`s Sex Education Curriculum

பெப்ரவரி மாதம் 23ம் திகதியன்று ஒன்ராறியோ மாகாணத்திற்கான உடற்சுகம் உடற்கல்வி பாடவிதானம் (Health and Physical Education Curriculum) ஒன்ராறியோவின் பிரதமர் கத்லின் வின்னால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இப்பாடவிதானத்தின் ஒரு பகுதியே பாலியல் கல்வி பாடவிதானமாகும். 2010ல் இதனை வெளியிடுவதற்கு அன்றைய பிரதமராக இருந்த Dalton McGuinty முயன்றபொழுது பெற்றோரிடமிருந்து பலத்த எதிர்ப்பு ஏற்பட்ட காரணத்தால் அதனை அமுலாக்காமல் பின்வாங்கி விட்டார். ஆனால் இன்றைய பிரதமர் கத்லின் வின்னும் கல்வி அமைச்சர் லிஷ் சான்டல்சும் என்ன எதிர்ப்பு ஏற்பட்டாலும் செப்டம்பர் 2015ல் ஆரம்பமாகும் புதிய கல்வியாண்டில் இது கட்டாயமாக அமுல்படுத்தப்படும் எனக் கூறியுள்ளனர். இவ் அறிவித்தல் விடுக்கப்பட்ட அடுத்தநாளே – அதாவது 24.02.2015 அன்று Queens Park முன்பாக அதற்குச் சார்பாகவும் – எதிராகவும் ஆர்ப்பாட்டங்களும், அணிவகுப்புகளும் குளிரிலும் நடைபெற்றதை எல்லோரும் அறிவோம். இது எதிர்பார்க்கப்பட்டதொன்றாகும்.

இந்த உடற்சுகமும் – உடற்கல்வியும் என்ற பாடவிதானம் இரு பிரிவாக வெளிவந்துள்ளது. வகுப்பு 1 – வகுப்பு 8 வரை ஒரு புத்தகமாகவும், வகுப்பு 9 – வகுப்பு 12 வரை ஒரு புத்தகமாகவும் வெளியிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு வகுப்பிலும் என்ன கற்பிக்கப்படும் என்பது விலாவாரியாக விளங்கப்படுத்தப்பட்டுள்ளது. இதனை தமிழில் மொழிபெயர்க்காமல் ஆங்கிலத்திலேயே தருகிறேன். இதற்குக் காரணம் தமிழில் கூறும்பொழுது விரசமாக இருப்பதுடன் தகுந்த சொற்களும் கிடைக்கவில்லை.

What students will learn and when

Grade 1: Proper names for body parts.

Grade 2: Bodily changes and development, verbal and physical violence, the concept that "no means no."

Grade 3: Same-sex relationships, gender identity, safety guidelines for internet use.

Grade 4: Physical, emotional and social impacts of puberty, risks associated with communications technology.

Grade 5: More information about puberty, including menstruation and spermatogenesis, and how these processes relate to reproduction.

Grade 6: Masturbation, "gender expression," healthy relationships.

Grade 7: Bullying, the dangers of "sexting," importance of delaying sexual activity, sexually transmitted infections and symptoms.

Grade 8: Benefits and risks of relationships involving different degrees of sexual intimacy.

Grade 9: Mental health, further information about gender identity, sexual orientation and the resources available for support.

Grade 10: Factors that influence sexual decision-making, including personal values, peer and family expecations, and media messages.

Grade 11: Proactive health measures such as breast and testicular examinations.

Grade 12: Effects and legal implications of harasment, violence and abuse, and ways of responding to and preventing them.

பாலியல் கல்வி இன்றைய காலகட்டத்தில் கட்டாயமாகப் போதிக்கப்பட வேண்டும் என்பது மறுக்க முடியாத ஒரு விடயமாகும். இதுபற்றிய எண்ணங்கள், விளக்கங்கள் யாவும் வீட்டிலேயே ஆரம்பிக்கப்பட வேண்டும். ஆனால் இது ஒரு உணர்ச்சிபூர்வமான விடயமாக இருப்பதால் (sensitive issue) பெற்றோரால் இதனைக் கையாள முடியாது. ஆகவே இதனைச் செய்ய முன்வந்துள்ள பாடசாலைகளுக்கு அனுசரணை வழங்குவது பெற்றோரின் கடமையாகும்.

இந்தப் பாடவிதானத்தை தயாரிக்கும்பொழுது பெற்றோர், கல்விமான்கள், சமயத்தலைவர்கள், ஏன் – மாணவர்களிடம் கூடக் கலந்தாலோசித்துள்ளனர். Ontario Elementary Teachers Union Prsident Sam Hammond – 21ம் நூற்றாண்டில் இத்தகைய ஒரு பாடவிதானம் கட்டாயமாகத் தேவை என்று கூறியுள்ளார். 10 வீத மக்கள் மாத்திரம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாக Environics Research அறிவித்துள்ளது.

1998ல் தான் கடைசி முறையாக இப்பாடவிதானத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டன. ஆனால் இன்றைய காலகட்டத்துக்கு இது ஏற்றதல்ல (Antiquated). பலவிதமான மாற்றங்கள் இந்த 20 ஆண்டு காலத்தில் நடைபெற்று விட்டன. ஒருபால் சேர்க்கைத் தொடர்புகளை அன்றைய சமூகம் ஏற்கவில்லை. ஆனால் இன்றோ ஒரு பாலியல் திருமணங்கள் சட்டபூர்வமாகவும், பகிரங்கமாகவும் நடைபெற்று சமூகத்தவர்களால் மதிப்புடன் கொண்டாடப்படுகின்றன.

Sexting – பாலியல் சம்பந்தமான செய்திப் பரிமாற்றம் அன்று காணப்படவில்லை. இன்றைய தொழில்நுட்பக் கருவிகள் மூலம் பிள்ளைகள் பெற்றோரின் பார்வையில் அகப்படாமல் பல ஆபத்துகளைச் சந்திக்கிறார்கள். நல்ல படித்தவர்கள், சமூக அந்தஸ்து உடையவர்கள்கூட ஆபாசப் படங்கள் எடுப்பதில் (Pornography) ஈடுபட்டு கைதாகின்றனர். காமுகர்களும், பிறழ்நடையுள்ளவர்களும் சாதாரணமாக உலாவும் ஒரு சமூகத்தில் இன்று நாம் வாழுகின்றோம். ஆகவே பிள்ளைகளை 'அறியாமையில்' வளர்ப்பது தவிர்க்கப்பட வேண்டும்.

வகுப்பு 9 – 12 பாடவிதானம் போதிப்பதில் பெரிதாக ஒரு கஷ்டமும் இருக்கப் போவதில்லை. ஏனெனில் இந்த வகுப்புகளில் உள்ள பிள்ளைகளுக்கு இவை யாவும் தெரிந்து இருக்கின்றன (Exposure). ஆனால் ஒரு ஆசிரியரின் கீழ் இவற்றை கற்கும்பொழுது இவ்வயதில் ஏற்படக் கூடிய பல ஆபத்துகளில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும். Cyber Bullying, தற்கொலைகள், திருமணத்தில் ஈடுபடாமல் பதின்ம வயதில் குழந்தைகளுக்குப் பெற்றோர் ஆகுதல், பாலியல் சம்பந்தமான நோய்களில் இருந்து தம்மைப் பாதுகாத்தல் முதலியவற்றை இவர்கள் அறிய முடியும்.

வகுப்பு 1 – 5 பிள்ளைகள், அதாவது 5 வயது தொடக்கம் 10 வயதுவரை உள்ள மாணவர்களின் பாட அலகுகளைப் பார்க்கும்பொழுது மனதுக்குச் சங்கடமாகத்தான் இருக்கிறது. சிறுபிள்ளைகளின் மனதில் தேவையில்லாத எண்ணங்களை ஏற்படுத்தி பல ஐயப்பாடுகள் (Inquisitiveness) ஏற்பட இடமுண்டு. ஆனால் இன்று இவ்வகுப்புகளில் ஒரு பால் இனப் பெற்றோரின் பிள்ளைகள் கல்வி கற்கிறார்கள். இவற்றுக்கு பெற்றோரால் விளக்கம் கொடுப்பது கடினம். அத்துடன் 4ம், 5ம் வகுப்பிலேயே இன்றைய பெண்பிள்ளைகள் பூப்படைகிறார்கள். ஆகவே பிள்ளைகள் முன்கூட்டியே இவற்றைத் தெரிந்திருத்தல் நலம்.

பிள்ளைகளை பெற்றோர் விரும்பாதவிடத்து இவ்வகுப்புகளுக்குச் செல்லாமல் இருப்பதற்கு கல்விச் சபை அனுமதி வழங்கும். ஆனால் அது மிகவும் மடமையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசனின் பத்தாம் பக்கம்

# வாழும் சுவர்கள்

முன்பு ஒரு காலத்தில் ஊருக்குள் நம்ப முடியாத செய்திகளை நம்ப வைத்ததில் தெருச்சித்திரங்களுக்கும் பங்கிருந்தது. பாடசாலை கழிவறைகள் தொடக்கம் தெரு மதகுகள், சிதிலமடைந்த மதிற் சுவர்கள், மயான மண்டபங்கள் போன்றன கரித்துண்டுகளாலும் பச்சிலைகளாலும் கிறுக்கர்களின் களமாகி கிறங்கடித்தன. அசுத்தமான இடங்கள் அவர்களுக்கு தடையாக இருந்ததுமில்லை. அசிங்கமான வார்த்தைகளுக்கு அவர்கள் தடை விதித்ததுமில்லை. வியப்பு – திகைப்பு – தவிப்பு – முறைப்பு – வெறுப்பு – கடுப்பு என பல உணர்வுகள் பாதிப்படைந்தவர்களிடம் மட்டுமல்ல அவற்றை பார்த்தவர்களிடமும் ஏற்பட வேண்டும் என்ற கற்பனையுடன் அந்த கிறுக்கர்கள் அநாமதேயமாகவே சிரித்தார்கள்.

அந்த கிராமிய நினைவுகள் பலருக்கு இப்பொழுதும் மங்கலாக ஞாபக இடுக்குகளில் அப்பியிருக்கும்.

பரவலாக ஆசியாவில் மட்டுமே இவ்வகை கிறுக்கல்கள் வம்பை வதந்தியாக்கிட ஏனைய கண்டங்களில் அரசை விமர்சித்தும், விழிப்புணர்வை ஏற்படுத்தியும், ரகசிய தகவல்களை பகிரங்கமாக்கியும், நாட்டு நடப்புடன் கேலி பேசியும் மனங்களை வெள்ளை அடித்தன. மன்னிக்கவும் கொள்ளை அடித்தன. அதனால் அங்கெல்லாம் மறைவிடங்களை விட்டு வெளியேறி பொது இடங்களுக்கு வந்து சிரிக்கும் சந்தியாக சாட்சியளிக்கின்றன. தெருச் சித்திரம் (Street Art) வரைகலை (Graphic) கிறுக்கல் (Graffiti) சுவரோவியம் (Mural) போன்ற பல பெயர்கள் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து தற்காலத்தில் வாழும் சுவர் (Living Wall) என்ற புதுப் பெயர் பொலிவு பெறுகின்றது.

மனங்களை கிறுக்கியவர் மறைந்தார் என இங்கிலாந்து நாட்டவர் அண்மையில் இணையத்தில் ஆரம்பிக்க பாங்ஸியின் பெயர் சொல்லியே எக்கச்சக்கமான குறிப்புகள் மிகவும் குறுகிய நேரத்தில் குவிந்தன. பாங்ஸி என்றால் யார் என அறியும் ஆவல் பலரின் தூக்கத்தைத் துரத்தியது. மறுநாள் பார்த்த பொழுது அச்செய்தி தவறு என்ற குறிப்புடன் முன்னையது வாபஸ் பெறப்பட்டிருந்தது. எனினும் கடைக்கண் பார்வையுடன் மட்டும் எவரையும் கடந்து போக விடாதவர் – பாங்ஸி!

மேற்குலகில் குறிப்பாக இங்கிலாந்தில் பல காலமாக வாழும் சுவர்களுடன் பாங்ஸி (Bansky) என்ற பெயரும் விழிக்கும் வீதிகளில் சுவர்களுடன் வாழ்கின்றது. அவர் சுவர்களில் புதுமை புகுத்தும் சைத்திரிகர் மட்டுமல்ல தீவிர அரசியல் ஈடுபாடு உடையவர் திரைப்பட இயக்குனர். உலகின் பல நாடுகளின் தலைநகரங்களில் பாங்ஸியின் கைவண்ணம் மக்களின் மகோன்னத வரவேற்பு பெற்றுத் திகழ்கின்றது. 2010ம் ஆண்டு உலகின் மிகவும் சக்தி வாய்ந்த 100 மனிதர்களில் பாங்ஸியும் ஒருவர் என்றது டைம் சஞ்சிகை. ஆனால் அவர் யார் என்பதே தெரியாது சர்வதேச காவற்துறை இன்றுவரை அல்லாடிக் கொண்டிருப்பதுதான் விசித்திரம். பாங்ஸி என்ற பெயருக்குரியவர் ஆணா? பெண்ணா? அல்லது ஒரு குழுவா? என்பதற்கு ஒரு சிறு தடயம் கூட சிக்காமல் காவல் துறை திணறித் தவிக்க ஆர்ப்பரிக்கும் அவரது ரஸிகர்கள் அவரது சமூக உணர்வுப் பணிக்காக இதுவரை பல விருதுகளுக்காக சிபார்சு செய்துள்ளனர். அவர் எதனையும் ஏற்கவில்லை.

பாங்ஸியின் தெருச் சித்திரங்கள் வித்தியாசமானவை. ஒரு முறை லண்டன் காவற்துறை சி.சி.ரி.வி (C.C.T.V) கண்காணிப்பு கருவிகளை அவரது சுவரோவியங்களின் புகைப்பட கண்காட்சி நடைபெறவிருந்த மண்டபமெங்கும் பரவவிட்டது. மறுநாள் மண்டப வாசல் மதிற் சுவரில் மிகவும் பெரிய எழுத்துகளில் காவற்துறையை வரவேற்ற வாசகம் 'ஓர் உலகம் கண்காணிப்பு கமராவின் கீழ்' என்றிருந்து பிரமிப்பூட்டியது. இரவோடிரவாக எழுதிச் சென்றவர் பாங்ஸி. பராமரிப்பதற்கு நிதி பற்றாக்குறை காரணமாக மாநகர சபை சிறாருக்கான விளையாட்டுப் பூங்காக்களை குறைப்பதற்குத் தீர்மானித்த பொழுது Parking என காணப்பட்ட இடங்களிலெல்லாம் Park என சுருக்கி A என்ற எழுத்துள் சிறுவர் ஊஞ்சல் கட்டி ஆடுவதாகச் சித்தரித்து எதிர்காலத்தில் வாகன தரிப்பிடங்கள் விளையாடும் திடல்களாகும் என எச்சரித்தார். இளவரசி டயானாவை மக்கள் மகாராணி என மகுடமிட்டு Bank of England என்பதை 'Banksy of England ஆக மாற்றிய அவரது சாதுரியத்தால் தாங்கள் வைத்திருக்கும் பணத்தில் இளவரசி டயானா இருக்கின்றாரா என மக்கள் ஆராய முற்பட புழக்கத்திலிருந்த போலி நோட்டுகளின் பாவனை இல்லாதொழிந்தது.

சிறுவன் ஒருவன் வானத்தைப் பார்த்து அழுகின்றான். மேலே ஒரு வாசகம் – இவனுக்கு லைக் போட எவருமே இல்லை! இது ஊடகங்களின் முக்கியத்துவத்தை உணர்த்தியது. தண்ணீரில் அரைவாசி மூழ்கியபடி ஒரு வாசகம் சொல்வது 'நான் உலக வெப்பமயமாதலை நம்பவில்லை'. ஸ்பானிய மொழி பேசும் கன்னியாஸ்திரிகள் கூட்டமொன்று பிற நாடொன்றுக்கு பிரசாரத்துக்காக சென்றபோது அங்கிருந்த மதவெறியர்களால் ஊறு விளையும் என்ற அச்சத்தை எதிர்நோக்கியது. அதற்கு எதிராக ஸ்பானிய மொழியில் வார்த்தை ஜாலம் புரிந்திருந்தார் பாங்ஸி. தமிழ் பேசும் கன்னியாஸ்திரிகளாக அவர்கள் இருந்திருப்பின் அந்த கில்லாடியின் வார்த்தை சடுகுடு இப்படி அமைந்திருக்கக்கூடும். தவறு விட வேண்டிய கன்னியாஸ்திரிகள் அல்ல: இவர்கள் தவற விட வேண்டிய கன்னியாஸ்திரிகள்.


பாதிப்படைந்தவர்கள்தான் முண்டியடித்துக் கொண்டு இதனைப் பார்ப்பார்கள் என்ற நிலைமாறி பரவசப்படுபவர்கள்தான் முதலில் பார்ப்பார்கள் என்ற மாற்றத்தை தந்தது இந்தப் பகுதி என்பதை காலம் கட்டாயம் சொல்லும்.

ஒன்றுக்கும் அஞ்சாத அதன் அலட்சிய கர்வம் அப்பொழுது போற்றப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னையா விவேகானந்தன்



# நல்லாசிரியர்

02

சமகால சமூகத் தேவைகளில் கல்வி முதன்மையானதாகக் கருதப்படுகின்றது. குறிப்பாக வளர்ச்சியடைந்த நாடுகளில் கல்வி தொடர்பான சிந்தனைகள் நாளுக்குநாள் மெருகேறி வருகின்றன. கல்வி தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகளின் முடிவுகள் சிறப்பான கல்விக்கு உதவி வருகின்றன.

கல்வித்துறையில் ஆசிரியர் – மாணவர் என்போர் கூட்டுப் பங்காளிகளாகக் கருதப்படுவர். சிறந்தவொரு சமுதாயத்தை உருவாக்குவதற்கான தொடக்கநிலைக் கூட்டுச் செயற்பாடு இதுவாகும். சமகால ஆய்வுகளின் வழியே இச் சொற்களுக்கான பொருள் புதுவடிவம் பெற்றிருக்கின்ற போதும் பண்டைக்கால தமிழ்ச் சமுதாயம் கூறிய வரைவிலக்கணங்களையும் நாம் புறக்கணித்துவிட முடியாது.

ஆசிரியர் என்ற சொல் பொருள் பொதிந்ததாகும். ஆசு என்றால் குற்றம் என்பர். இரியர் என்பது இல்லாதவர் என்பதாகும். குற்றமற்றவராக இருப்பதே ஆசிரியரின் தலைமைப் பண்பு என்பதை இச்சொல் உணர்த்துகின்றது.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் பவணந்தி முனிவர் என்ற சமண சமய அறிஞரால் எழுதப்பட்ட தமிழ் இலக்கண நூல் நன்னூல் ஆகும். ஆசிரியர் பற்றிய செய்திகளை ஆங்காங்கே இலக்கியங்கள் குறிப்பிட்டிருந்தாலும் நன்னூலே ஆசிரியர் பற்றிய வரைவிலக்கணத்தை ஓரளவு முழுமையாகத் தர முயன்றிருக்கின்றது.

ஒரு நல்ல ஆசிரியருக்கு உவமையாக நான்கு பொருட்களைக் கூறி அதன் வாயிலாக ஆசிரியரது இயல்புகளை விளக்க முயல்கின்றார் நன்னூலார்.
நன்னிலமும் நல்லாசிரியனும்:
"தெரிவரும் பெருமையுந் திண்மையும் பொறையும்
பருவம் முயற்சி யளவிற் பயத்தலும்
மருவிய நன்னில மாண்பா கும்மே"
ஒரு நிலமானது தன்னில் கணக்கிடமுடியாத பொருட்களை கொண்டு விளங்கும். அவ்வாறே எவற்றையும் தாங்கும் உறுதியினையும் பெற்றிருக்கும். மக்கள் எவ்வளவு அகழ்ந்தாலும் அவர்கள் மேல் கோபம் கொள்ளாமல் பொறுத்துக் கொள்ளும் இயல்பையும் கொண்டிருக்கும். அவ்வாறே மக்களின் முயற்சிகளுக்கேற்ப அவர்களுக்குரிய பயனையும் கொடுக்கும் இயல்பு உடையதாக இருக்கும்.

அவ்வாறே நல்ல ஆசிரியரும், நிலம் எவ்வாறு தன்னுள் பல பொருட்களை கொண்டு பெருமை பெற்று விளங்குகின்றதோ அதைப் போன்றே, தாம் பல்வேறு நூல்களின் வாயிலாக கற்றறிந்த பொருள்களைச் செம்மையாகக் கொண்டிருக்க வேண்டும். அவற்றை மாணவரிடத்தே சேர்க்க வேண்டும். எந்த நிலை வந்தாலும் அதனைக் கண்டு வாடாத மனத் திண்மையையும் கூடவே மாணவர் அறியாது செய்யும் தவறைப் பொறுத்துக் கொள்ளும் இயல்பும் கொண்டிருத்தல் வேண்டும். மாணவர் கல்வியினைக் கற்கும் ஆர்வத்திற்கேற்ப ஏற்ப, அவர்களுக்குரிய பயனை வழங்குபவராக இருத்தல் வேண்டும்.
மாமலையும் நல்லாசிரியரும்:
"அளக்க லாகா அளவும் பொருளும்
துளக்க லாகா நிலையுந் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையு மலைக்கே"
இதன் அளவு இவ்வளவுதான் என்று அளந்து கூற இயலாத அளவும் பொருளும் கொண்டிருப்பது மலையாகும். துளையிடப்பட முடியாத உறுதியும், அத்தகைய உறுதியினை வெளிப்படுத்தும் தோற்றமும் ஒரு மலையின் தன்மைகளாகும். அத்தோடு மக்கள் வறுமையிலே வாடும் பொழுது அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய என்றும் வற்றிப்போகாத பழங்களும் பிற பொருட்களும் நிறைந்ததாக மலை விளங்கும். மலையைப் போன்றே ஒரு நல்லாசிரியர் 'இவரின் கல்வியளவு இவ்வளவுதான்' என்று மற்றவர்களால் அளந்துக் கூற இயலாதளவு ஆழ்ந்த கல்வி அறிவினைப் பெற்றிருத்தல் வேண்டும். எத்தகைய வினாக்கள் எழுந்தாலும் உறுதி குலையாது விடை கூறும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும்.

மக்கள் அறியாமையில் இருக்கும்பொழுது கல்விச் செல்வங்கள் மூலமாக மக்களின் அறியாமையைப் போக்கும் ஆற்றலையும் அறிவையும் பெற்றிருத்தலும் நல்லாசிரியரது இயல்புகள் ஆகும்.
நிறைகோலும் நல்லாசிரியரும்:
"ஐயந் தீரப் பொருளை யுணர்த்தலும்
மெய்ந்நடு நிலையு மிகுநிறை கோற்கே"

நிறைகோல் என்பது தராசு ஆகும். இது இப்போது வழக்கத்தில் இல்லை. நடுவில் இருக்கும் இதன் கோல் நேராக நின்று இருபக்க நிறையையையும் சமப்படுத்தும். ஒரு பொருளின் நிறை பற்றிய ஐயங்கள் எழுமானால் அதனை ஆராய்ந்து அந்த ஐயத்தினைப் போக்கும் இயல்பும் இந்த நிறைகோலுக்கு உண்டு.

ஆசிரியர் என்பார் ஐயங்களோடு அணுகும் மாணவருக்குத் தெளிவூட்டித் தீர்த்து வைக்கும் ஆற்றலையும், மாணவருக்குள் எந்த வேறுபாடுகளையும் காட்டாது அனைவரையும் ஒத்ததாக நோக்கும் பக்குவமும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
மலரும் நல்லாசிரியரும்:
"மங்கல மாகி யின்றி யமையாது
யாவரு மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்
பொழுதின் முகமலர் வுடையது பூவே"
பெரும்பாலான நல்ல நிகழ்வுகளில் தமிழரால் பயன்படுத்தப்படுகின்ற பொருள் பூவாகும். பொதுவாக எல்லோருமே மலரை விரும்புவர். உரிய பொழுதில் அதுவாகவே பூத்து அயல் எங்கும் மணம் பரப்பிக்கொண்டிருக்கும்.

நல்ல நிகழ்வுகள் யாவற்றிலும் கலந்துகொள்பவராகவும் மலர் போன்ற மலர்ச்சியை எப்போதும் கொண்டவராகவும் தான் சார்ந்திருக்கும் சூழலில் அறிவு மணம் பரப்புகின்றவராகவும் ஆசிரியர் இருத்தல் வேண்டும்.

இவ்வாறு நன்னூல் ஆசிரியருடைய இயல்புகளை எழுத்துரைக்கின்றது.
ஆசிரியர் பற்றிய நவீன சிந்தனைகளை அடுத்த தொடரில் காண்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குரு அரவிந்தன்

# திருவள்ளுவர் சிலை

12

கோபுரங்கள் தான் உயர்ந்து நிற்குமென்பதில்லை, சாதனைகளை எடுத்துச் சொல்லும் நினைவுச் சிலைகளும் கூட உயர்ந்து நிற்பதை பல இடங்களில் நாம் கண்டிருக்கின்றோம். தமிழரின் புகழை உலகெல்லாம் பரப்பி நிற்பவர்களில் திருக்குறளை ஆக்கித் தமிழ் உலகிற்குத் தந்த திருவள்ளுவர் காலமெல்லாம் போற்றப்பட வேண்டியவர். இவரைப் பொய்யாமொழிப் புலவர் என்றும் அழைப்பர். திருக்குறளின் புகழ் உலகெங்குப் பரவி நின்றாலும் அதை ஆக்கித் தந்தவரை நினைவு கூரவேண்டும் என்ற பெருவிருப்பின் காரணமாக அமைந்ததுதான் தமிழ் நாட்டின் தென்கரையில், கன்னியாகுமரியில் உள்ள வானம் தொட்டு நிற்கும் திருவள்ளுவர் சிலையாகும்.



கன்னியாகுமரி முனையில், விவேகானந்தர் நினைவுப் பாறைக்கு அருகே உள்ள பாறை-யில் அமைந்திருக்கும் இந்தத் திருவள்ளுவர் சிலை 133 அடி உயரத்தைக் கொண்டது. வங்காளவிரிகுடா, அரபிக்கடல், இந்து சமுத்திரம் ஆகிய மூன்று கடல்களும் சந்திக்கும் முக்கிய இடத்தில் இந்தச் சிலை நிமிர்ந்து நிற்கின்றது. 1979ஆம் ஆண்டு இந்தியப் பிரதமராக இருந்த மொராஜிதேசாய் அவர்களால் இதற்கான அத்திவாரக் கல் நாட்டப்பட்டது. ஆனாலும் 1990ஆம் ஆண்டுதான் இதற்கான முக்கிய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. கன்னியாகுமரியில் உள்ள கலங்கரை விளக்கத்திற்கு இதனால் இடையூறு ஏற்படும் என்று கூறி, திருவள்ளுவர் சிலையை இந்த இடத்தில் அமைக்க 1994ஆம் ஆண்டு மத்திய அரசு தடை விதித்திருந்தாலும், 1996ஆம் ஆண்டு தமிழ் பெரியோரின் விடா முயற்ச்சியால் தடை நீக்கப்பட்டது. 2000ஆம் ஆண்டு இந்தப் பணி முடிவடைந்தது.

திருவள்ளுவரின் இந்தச் சிலை 7000 தொன் எடை கொண்டது. இதற்கான கற்கள் முக்கியமாக கன்னியாகுமரி, அம்பாசமுத்திரம், சங்கரபுரம் ஆகிய மூன்று இடங்களில் இருந்தும் பெறப்பட்டு வேலைகள் இடம் பெற்றன. திருவள்ளுவருக்கான சிலையும் மேடையும் அமைப்பதற்காகப் பாவிக்கப்பட்ட கற்களில் 3681 கற்கள் பதினைந்து தொன்களுக்கு மேற்பட்ட நிறையைக் கொண்டிருந்தன. ஏனைய கற்களில் அனேகமானவை சராசரி மூன்று தொடக்கம் பத்து தொன்கள்வரை நிறை உடையனவாக இருந்தன. இதைவிட 19 அடி உயரமான முகம், குறிப்பாக காதுகள், மூக்கு, கண்கள், வாய், நெற்றி போன்றவை தனித்தனிக் கற்களில் கையால் பொழிந்து பொருத்தப்பட்டன. நுட்பமான கற்களைச் செதுக்குவதற்கு மிகவும் அனுபவம் மிக்க சிற்பிகள் ஈடுபடுத்தப்பட்டனர். சுமார் ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் வரை இந்தச் சிலை செய்வதற்காகச் செலவிடப்பட்டது. அனுபவம் மிக்க சிற்பிகள், மேற்பார்வையாளர்கள் உட்பட சுமார் 150 தொழிலாளர்கள் இந்தச் சிலையை நிர்மாணிப்பதற்கு மிகவும் உதவியாக இருந்தனர்.

திருவள்ளுவர் நினைவுச் சின்னத்தின் மொத்த உயரம் 133 அடியாக இருந்தாலும் சிலையின் உயரம் 95 அடியாகவும், சிலை வைக்கப்பட்டுள்ள பீடம் 38 அடி உயரமாகவும் இருக்கின்றது. திருவள்ளுவர் தந்த திருக்குறளில் 133 அத்தியாயங்கள் இருப்பதால் அதை அடையாளப் படுத்துவதற்காக 133 அடி உயரச் சிலை வடிவமைக்கப்பட்டது. இதில் 133 குறட்பாக்களும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. சென்னையில் உள்ள வள்ளுவர் கோட்டத்தை உருவாக்கிய பிரபல சிற்பி கணபதி ஸ்தபதி இதற்குப் பொறுப்பாக இருந்தார். மிலேனியம் ஆண்டாகிய 2000 ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி பொதுமக்கள் பார்வைக்காக இந்தச் சிலை திறந்து வைக்கப்பட்டது.

தமிழ் மொழி பேசுவோர் இன்று உலகெல்லாம் பரவி இருப்பதால், பல நாடுகளில் இருந்தும் வருகின்ற சுற்றுலாப் பயணிகள் ஆர்வத்தோடு வந்து பார்க்கும் முக்கிய நினைவுச் சின்னமாகத் திருவள்ளுவரின் சிலை அமைந்திருக்கின்றது. இந்த திருவள்ளுவரின் நினைவுச் சின்னம் 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலையால் சிறிதளவு பாதிக்கப்பட்டாலும், பின்னாளில் திருத்தி அமைக்கப்பட்டது. திருவள்ளுவர் சிலை எழுப்பிய 15வது வருட நினைவு தினம் திருவள்ளுவர் சிலை பாறை வளாகத்தில் கன்னியாகுமரி வரலாற்று பண்பாட்டு ஆய்வு மையத்தினால் 2015ஆம் ஆண்டு ஜனவரிமாதம் கொண்டாடப்பட்டது.

இந்த ஆண்டு திருவள்ளுவர் தினத்தை தேசிய அளவில் கொண்டாடவும், கன்னியாகுமரியில் உள்ள திருவள்ளுவர் சிலை பாறை வளாகத்தில இருந்து சென்னைக்கு திருக்குறள் திருப்பயணம் செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. எம்மினத்தின் அடுத்த தலைமுறையினர் அவசியம் பார்க்க வேண்டிய நினைவுச்சின்னங்களில், உலகெல்லாம் தமிழரின் புகழ் பரப்பி நிற்கும் இந்த திருவள்ளுவர் சிலையும் ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ராஜ்மோகன்

# பணிலமாடம்

12

## மரணத்தின் இறுதிக் கணக்கு

எமது மரணத்தின் பின்னரும் வருமான வரி செலுத்த வேண்டும் என்பது எப்படிச் சாத்தியமாகும்? நாம் உயிருடன் இல்லாத போது இறுதியான வருமான வரிக்கு யார் பொறுப்பு?

மரணித்த ஓர் உயிருக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலே நடைபெறும் கடைசிச் சந்திப்பே இறுதி வருமான வரிக் கணக்கு - Final Tax Settlement அல்லது Final Return ஆகும். இதில் உள்ள நல்ல விடயம் என்னவென்றால், நாம் சிரமப்பட்டுச் சம்பாதித்த சொத்துகளும், நாம் தேடிய சொந்தங்களும் மரணத்தை எப்படி அணுகுகின்றது என்பதை உணர்ந்து கொள்ள நாம் உயிருடன் இருக்கமாட்டோம்.

வாழ்நாள் பூராவும் பூமியின் வளங்களை நமது தேவைகளுக்காகப் பயன்படுத்தியதற்கான கடைசி வாடகைக் கட்டணத்தை முழுமையாகக் கொள்முதல் செய்வதற்கு அரச இயந்திரம் பல அதிகாரங்களையும், சட்டங்களையும் அமுல்படுத்தியுள்ளது. Probate court எனப்படும் விருப்புறுதி விசாரணை நீதிமன்றம், நமது இறப்பு பதியப்பட்டவுடன் 'உயிர் வாழ' ஆரம்பித்துவிடும். இந்தச் சட்டத்தின் பிடியில் இருந்து 'தப்பினோம்' 'இறந்தோம்' என்று விலகி நிற்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைதான் இந்த எஸ்ரேட் பிளானிங் (estate planning) எனப்படும் சொத்துரிமைத் திட்டம்.

எமக்கு மரணம் ஏற்பட்ட பின்னர் இறுதியான வருமான வரி பத்திரங்கள் சில விதிவிலக்குகளுடன் 6 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்படுதல் அவசியம் என்கின்றது சட்டம். சம்பந்தப்பட்ட சொத்துக்களுக்கு உயில் (will) எழுதப்படாத போது இதற்காக estate's executor/liquidator ஒருவர் நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். குடும்ப அங்கத்தவர்கள் ஒருவரும் இந்தப் பொறுப்பை எடுக்காத போது probate court தனது பிரதிநிதி ஒருவரை நியமித்து சட்ட பூர்வமாக அதனை நிறைவு செய்யும்.

இறுதி வருமானவரிக் கணக்கு தாக்கல் செய்யும் போது மரணமடைந்தவரின் அனைத்து வருமானங்களும், அவரது மொத்த அசையும் மற்றும் அசையாத சொத்துகளின் capital gain வருமானமும் மொத்த வருமானமாகக் கருதப்பட்டு, அவர் எடுத்துள்ள கடன்கள் யாவும் கொடுக்கப்பட்டு, வரிகள் யாவும் கட்டப்பட்டு மிகுதியை மரணித்தவரின் வாரிசுகளுக்குக் கொடுக்கப்படும். இதில் சில விதிவிலக்குகளும் உள்ளன. surviving spouse எனப்படும் மனைவிக்கு இந்த சொத்துகள் மாற்றப்படும் போது இந்த வரி விலக்குகள் அளிக்கப்படுகின்றது. ஆனால் மனைவியின் மரணத்தின் போது இந்த வரிகள் திரும்பவும் அமுலுக்கு வரும். அத்துடன் பிரதான குடியிருப்பு வீடு, விவசாய நிலங்கள் மற்றும் மீன்பிடி வியாபாரம் போன்ற சிலவற்றுக்கு வரிவிலக்கும் அளிக்கப்படுகின்றது.

ஒருவரின் மறைவுக்குப் பின்னால் அவருக்குச் சொந்தமான சொத்தை எந்தப் பிரச்சனையும் வராமல் அவர்களது வாரிசுகள் அனுபவிக்க, முன்கூட்டியே தெளிவாக முடிவெடுத்து அதற்கான ஆயத்தங்களைச் செய்வதே சொத்துரிமைத் திட்டங்களின் அடிப்படை நோக்கம்.

Capital gain எனப்படும் முதலீடுகளின் வளர்ச்சி கொண்ட சொத்துக்கள், அடுத்த தலைமுறையினருக்கு சென்றடைவதற்கு அதற்குரிய capital gain tax எனப்படும் முதலீட்டு அதிகரிப்பு வரி செலுத்தப்பட வேண்டும். உதாரணமாக நாங்கள் இருக்கும் பிரதான குடியிருப்பு தவிர்ந்த (Primary home) இன்னுமொரு வீடு (rental property) அல்லது cottage ஒன்று உள்ளதாகக் கருதுவோம். எமது இறப்பின் பின்னர் இந்த மேலதிக சொத்து எங்கள் பிள்ளைகளுக்கு மாற்றமடையும் போது கட்டாயம் capital gain வரி கட்டப்பட வேண்டும். இது இறுதியான வருமான வரிக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

இந்த முதலீட்டு அதிகரிப்பு வரியைக் கணிப்பிடும் போது, இன்றைய சந்தை நிலவரத்தின்படி அந்த சொத்தின் பெறுமதி எவ்வளவால் அதிகரித்துள்ளதோ அதனது 50 வீதம் இறந்தவரின் அந்த வருடத்திற்குரிய வருமானமாகக் கணிப்பிடப்பட்டு அதற்குரிய வருமான வரி கணக்கிடப்படுகின்றது. இந்த வருமான வரியைச் செலுத்தினால் மட்டுமே இந்த இரண்டாவது சொத்தைப் பிள்ளைகளுக்கு மாற்ற முடியும். இது நடைபெறாது விட்டால் அந்த சொத்து அவசரமாக விற்கப்பட்டு வரி செலுத்தப்பட வேண்டும்.

குறுகிய காலத்தினுள் ஒரு சொத்தை விற்பதென்பது power of sale என்று கருதப்படுவதால் அந்த சொத்துக்குரிய சரியான விலை நிர்ணயிக்கப்படாமல் குறைந்த விலைக்கு விற்கப்படுவது சாத்தியமாகின்றது. குடும்ப அங்கத்தவர்களால் இது நடைமுறைப்படுத்தப்படாது விட்டால் probate court அந்த சொத்தை விற்பதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளும்.

இந்த நிலையில் இறுதியாக நஷ்டமடைவது நமது வாரிசுகள் மட்டும் தான். அனேகமான சந்தர்ப்பங்களில் நமக்கு மரணம் ஏற்படும் போது நமது பிள்ளைகள் அப்போதுதான் வாழ்க்கைச் சக்கரத்தின் இக்கட்டான இடைநிலையில் இருப்பார்கள். அந்த நேரத்தில் அவர்களிடம் capital gain வரிகளைச் செலுத்துவதற்கான வசதிகள் இல்லாமல் இருக்கலாம். அதுமட்டுமல்லாமல் எமது அந்திமகால சேவைகளுக்கான செலவீனங்களையும் அப்போதுதான் ஏற்றுக்கொண்டிருப்பார்கள். இந்த நிலையில் அனேகமான பிள்ளைகள் தமது பெற்றோர் இருந்த பரம்பரைச் சொத்துக்களை விற்பதற்கு தயக்கம் காட்டி தொடர்ந்து வைத்திருக்கவும் விருப்பப்படுவார்கள்.

இந்தப் பிரச்சனைகளைத் தவிர்ப்பதற்காகத்தான் சரியான estate planning செய்யப்பட்டு, நிரந்தர ஆயுட்காப்புறுதி அல்லது நிலையான சேமிப்புக்கள் செய்யப்படுகின்றன. நாம் மரணத்தைத் தழுவும் போது எமது ஆயுட்காப்புறுதித் திட்டங்கள் இந்த capital gain வரியை செலுத்தி சொத்துகளைக் காப்பாற்ற உதவுகின்றதோடு எமது அந்திமகால சேவைகளுக்கான செலவினங்களையும் கவனித்துக் கொள்கின்றது. எனவே ஆயுட்காப்புறுதி என்பது அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாகக் கூட கருதப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரா. சம்பந்தன்

# தமிழ் தொலைந்த தமிழ்!

இது கால தேவனின் கலக்கம். இதைக் காதல் என்பது வழக்கம். ஒரு ஆணும் ஒரு பெண்ணும் பெறப் போகும் துன்பத்தின் தொடக்கம் என்று தரிசனம் படத்துக்குப் பாட்டெழுதினார் கண்ணதாசன். ஆம்! காதலுக்கு இப்படியொரு வரைவிலக்கணத்தைக் கொடுத்தான் அந்தப் பிறவிக் கவிஞன்.

அவனின் கூற்று இக்கால எம்வாழ்வில் மட்டும் மெய்யாகி விடவில்லை. அக்கால இலக்கிய பாத்திரங்களுக்கும் பொருந்தி நின்றது. சிலம்பு ஆகட்டும். மணிமேகலை ஆகட்டும். சங்க இலக்கியங்களில் கலித்தொகை ஆகட்டும். ஏன், திருக்குறளின் காமத்துப் பால் ஆகட்டும். காதல் வாழ்வின் துயரங்களைத் தேக்கித்தான் வைத்திருக்கின்றன தம்மோடு.

அந்த இலக்கியங்களிலே அன்னம் தூது சென்ற நளவெண்பா காட்டும் துன்பச் சுவை மிகுந்த காதல் ஜோடிகள் நளனும் தமயந்தியும். நளனைத் தமயந்தி காதலித்தாள். சுயம்வர மண்டபத்திலே மாலையிட்டு மணம் முடித்தாள். காதல் வென்றது. ஆனால் விதி வசத்தால் வென்ற காதல் வாழ்க்கையில் தோற்று விடுகின்றது அந்த இலக்கியத்தில்.

நளன் அடைந்த துன்பம் அனைத்தையும் தானும் பங்கு போட்டு எடுத்துக் கொண்டாள் அந்தப் பேதை. நாடாண்ட நளன் காட்டுக்குப் போனான். தானும் கூடப் போனாள் அவள். காடு துன்பமற்று இருந்தது கட்டியவன் அருகிருந்த காரணத்தால்.

அப்படிப்பட்ட தமயந்தியைக் கொடிய காட்டிலே கடுமையான இருள் நிறைந்த இரவு ஒன்றிலே அவள் ஆழ்ந்து உறங்கும்போது தனிமையில் விடுத்துப் பிரிந்து விடுகிறான் நளன்.

பிரிந்து நடந்தவன் ஒரு கடற்கரைக்கு வந்து விடுகின்றான். கடற்கரையிலே ஆண் நண்டுகள் மணலிலே உலாவிக் கொண்டிருக்கின்றன. அவை நளனின் காலடி ஓசை கேட்டு யாரோ தம்மைப் பிடிக்க வருகிறார்கள் என்று அஞ்சி தமது பொந்துகளில் விரைவாக ஓடி ஒளித்துக் கொள்கின்றன.

உயிருக்குப் பயந்து நண்டுகள் ஒளித்த காட்சியை இலக்கியம் ஆக்குகிறான் புகழேந்திப் புலவன். கானகத்திலே கருமையான இருட்டிலே அதுவும் காதலித்து மணம் முடித்த பெண்ணைக் கைவிட்டு வருகின்ற இந்தப் பாதகனை நாங்கள் பார்க்கக் கூடாது. இவன் முகத்திலே விழிக்கக் கூடாது என்று நினைத்து நண்டுகள் ஓடி வளைகளிலே ஒளித்துக் கொண்டனவாம்.

காதலியை காரிருளில் கானகத்தே கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாது என்றோ – நாதம்
அளிக்கின்ற ஆழிவாய் ஆங்கலவ ஓடி
ஒளிக்கின்றது என்னோ உரை.

(நளவெண்பா–கலிநீங்கு காண்டம்)

இரைந்து அலைகள் ஒலிக்கின்ற கடற்கரையில் உலவும் ஆண்நண்டே! கானகத்திலே கரிய இருட்டிலே காதலியைக் கைவிட்ட பாதகனாகிய என்னைப் பார்க்கக் கூடாது என்று நினைத்தா நீ ஓடி ஒளித்துக் கொள்கின்றாய்? எனக்கு உண்மையைச் சொல் என்பது இந்தப் பாடலின் பொருள்.

இவ்வாறு இயற்கையாக நிகழும் சம்பவம் ஒன்றைக் கவிஞன் ஒருவன் தன் இலக்கியச் செய்தியோடு ஒற்றுமைப்படுத்திப் பாடல் செய்வதை தற்குறிப்பு ஏற்ற அணி என்று செய்யுளுக்கு ஒரு அலங்காரமாகக் காட்டினார்கள் எம் முன்னோர்கள்.

மிதிலை நகர வீதியிலே இராமர் நடந்து சென்றபோது மாளிகைகளின் உச்சியில் பறந்த கொடிகள் அவரைப் பார்த்து இலக்குமி சீதையாகப் பிறந்து உனக்காகக் காத்திருக்கின்றாள் வா வா என்று அழைத்தன என்று கம்பன் இந்த அணியைப் பயன்படுத்துவான்!

மை அறு மலரின் நீங்கி, யான் செய்
மா தவத்தின் வந்து,
செய்யவள் இருந்தாள் என்று,
செழு மணிக் கொடிகள் என்னும்
கைகளை நீட்டி, அந்தக் கடி நகர்,
கமலச் செங்கண்
ஐயனை ஒல்லை வா என்று
அழைப்பது போன்றது அம்மா.

(கம்பராமாயணம் – மிதிலை காட்சிப் படலம்)

குவளை மலரும் அல்லியும் தாமரையும் கோவலனும் கண்ணகியும் மதுரையிலே அடையப் போகும் கொடிய துன்பத்தை முன்னரே சந்தேகம் இன்றி அறிந்தன போல நடுங்கிக் கண்ணீர் சிந்தியதாகவும் மதுரைக்கு வராதீர்கள், துன்பம் அடையப் போகிறீர்கள் என்று கோட்டை மதிலின் கண் பூங்கொடிகள் வழி மறித்தாகவும் இந்த அலங்காரத்தை இளங்கோவடிகள் சிலம்பிலும் பயன்படுத்துவார்.

இங்கே நீரின் அலைகளால் தாமரையும் அல்லியும் அசைவது கோவலன் கண்ணகி அடையப் போகும் கொலைத் துன்பத்துக்காக அவை பயந்து நடுங்குவதாக சித்தரிக்கப்படுவது தற்குறிப்பு ஏற்ற அணியாகும்.

கரு நெடுங் குவளையும், ஆம்பலும், கமலமும்,
தையலும் கணவனும் தனித்து உறு துயரம்
ஐயம் இன்றி அறிந்தன போல,
பண் நீர் வண்டு பரிந்து இனைந்து ஏங்கி,
கண்ணீர் கொண்டு கால் உற நடுங்க
போர் உழந்து எடுத்த ஆர் எயில் நெடுங் கொடி,
'வாரல்' என்பன போல், மறித்துக் கை காட்ட

(சிலப்பதிகாரம் – புறஞ்சேரி இறுத்த காதை)

இன்று இந்த அலங்காரம் செத்து விட்டது! ஆனால் கவிஞர் வைரமுத்து இந்தத் தற்குறிப்பு ஏற்ற அணியைப் பயன்படுத்தி திரைப்படத்துக்கு ஒருபாடல் செய்தார்!

முகில் இனங்கள் அலைகிறதே
முகவரிகள் தொலைந்தனவோ
முகவரிகள் தவறியதால்
அழுதிடுமோ அது மழையோ

என்று அந்தப் பாடல் வரும்! காற்றினால் முகில் அசையும் இயற்கை நிகழ்ச்சி முகவரியைத் தொலைத்துவிட்டு அலைவதாக தன் குறிப்பை ஏற்றிச் சொல்லும்போது அது தற்குறிப்பு ஏற்ற அலங்காரம் ஆகின்றது! அது போல முகில் மழையாகப் பெய்யும் இயல்பு நிகழ்ச்சி முகவரியைத் தொலைத்துவிட்டு அழுவதாக மாற்றப்படும் போது தற்குறிப்பு ஏற்ற அணி ஆகின்றது!


அனால் இவற்றையெல்லாம் இன்றைய தமிழ் தொலைத்து விட்டு நிற்கின்றது. எங்காவது ஒரு சிலர் தம் கவிதைகளில் இவற்றைப் பயன்படுத்த முன்வந்தாலும் அதைப் புரிந்து கொண்டு அனுபவிக்கும் அறிவு இனிவரும் தமிழ்ச் சமுதாயத்துக்கு இருக்கப் போவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராதிகா சிற்சபைஈசன் இரவு விருந்து கலை நிகழ்வுகள் ஒன்றுகூடல்




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடியத் தமிழரால் முன்னெடுக்கப்பட்ட ஈழத்தமிழரின் 'மாற்றத்துக்கான குரல்'

ஈழத்தமிழரது தனித்துவ அரசியல் பேரியக்கத்தின் வலுவான தொடர்ச்சியை மீளக் கட்டமைக்கும் நோக்குடனான 'மாற்றத்துக்கான குரல்' என்ற செயற்திட்ட சமூக நிகழ்வு, இரவு விருந்துடன் இணைந்ததாக ரொறன்ரோ இரா விருந்து மண்டபத்தில் மார்ச் 15 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. ஏறக்குறைய 350 பேர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

முதல் நிகழ்வாக வரவேற்பு ஆடலை வழங்கினர் ஆடலகம் மாணவியர். மாற்றத்துக்கான குரல் என்பது என்ன? என்ற பலரதும் கேள்விக்கு விடையாக நிகழ்வு ஏற்பாட்டாளரில் ஒருவரான திரு. பொன்னையா விவேகானந்தனின் பின்வரும் உரை அமைந்திருந்தது:

"சமகால அரசியல் சூழலில் எமது அடிப்படைக் கோட்பாடுகளை விட்டுக்கொடுக்காது வலிமையோடு நாம் பயணிக்க வேண்டும். அடுத்து வரக்கூடிய தேர்தலினூடாகத் தெரிவுசெய்யப்படும் தமிழர்தலைமை ஈழத்தமிழரின் தேசியநலன் சார்ந்தே செயற்பட வேண்டும். தற்போது தமிழரது தலைமையாகத் திகழ்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இவ்வாறு தொடர்ந்து பயணிக்க வல்லவர்களா? என்ற வினா பலருக்கும் எழுந்துள்ளது. இந்த வினாவோடு வெறுமையடைந்த நம்மில் சிலர் ஒன்றுகூடினோம். நிறையவே பேசினோம். அதன் விளைவே 'மாற்றத்துக்கான குரல்'.




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழரது அரசியல் பேரியக்கத்தின் தொடர்ச்சியாகும். அதனை அழிக்க முயல்வதோ மாற்றுத் தலைமை களைத் தோற்றுவிப்பதனூடாக அதனை வலுவிழக்கச் செய்வதோ எமது நோக்கமல்ல. மாறாக, எமது அடிப்படைக் கோட்பாடுகளை விட்டு விலகாத, பெரிதும் தமிழரது தேசிய நலனை நோக்காகக் கொண்ட தமிழ்தேசிய மக்கள் முன்னணியிலிருந்து ஓரிருவரை எதிர்வரும் தேர்தலினூடாக இலங்கைப் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்வதனால் கூட்டமைப்பின தன்னிச்சையான போக்குகளைக் கட்டுப்படுத்தி, தமிழரது அடிப்படை உரிமைப் போராட்டத்தை வலுவாக்கலாம் எனக் கருதினோம்.

பிரித்தானியா இலண்டனில் இதே போன்று செயற்திட்டம் உருவாக்கப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இச்செயற்பாடுகள் எம் செயலூக்கத்தை வலுவடையச் செய்கின்றன.

இந்த செயற்பாட்டை நோக்கிய இணைவானது அமைப்பல்ல என்பதோடு இது அக்கட்சியின் கிளையல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம். அக்கட்சியின் கொள்கைகள் அனைத்தையும் முழுமையாக ஏற்றுக்கொண்டவர்கள் அல்ல நாங்கள். எமக்கும் அவர்களுக்கும் இடையே இடைவெளிகள் உள்ளன. முரண்கள் உள்ளன. ஆனால் பொது நோக்கில் உன்னதமானதோர் இலக்கில் நாம் ஒன்றுபட்டிருக்கின்றோம். இவ்விலக்கை நோக்கிய இச்செயற்றிட்டம் நிறைவடைந்ததும் 'மாற்றத்துக்கான குரல்' கலைக்கப்பட்டுவிடும் என்பதால் இது ஓர் அமைப்பல்ல என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றோம்". இவ்வாறு திரு பொன்னையா விவேகானந்தன் தன் உரையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து இணையவழியாகத் திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உரையாற்றுகையில், 2001இல் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தோற்றத்தின்போது, பங்காளிக் கட்சிகளான அனைவரும் தமிழரது தன்னாட்சியுரிமையை ஏற்றுக்கொண்டே இணைந்தனர். 2009 வரை இந்நிலையில் மாற்றங்கள் ஏற்படவில்லை. முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்குப் பின்னான அரசியல் சூழ்நிலைகள் இந்தியாவை விட்டு விரிந்து சர்வதேசத்திற்குப் போய்விட்டன. இந்நிலையில் நாம் இந்தியாவுக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்படுவது எம் நலன்களைப் பலப்படுத்தப்போவதில்லை அது இந்தியாவின நலன்களை மட்டுமே பாதுகாக்க உதவும் என்பதே எம் கருத்தாக இருந்தது. திரு. சம்பந்தன் அவர்கள் இந்தியா விரும்பாத ஒன்றைத் தாம் செய்யப்போவதில்லை எனத் திட்டவட்டமாகக் கூறினார். தொடர்ந்து 2010 வரை நான் என் கருத்துகளை வலுப்படுத்த முயன்றேன். முடியாத நிலையில் நான் விலக, வேறு சிலர் விலக்கப்பட்டனர்.

தொடர்ச்சியான நிலப் பறிப்பினூடாகக் கட்டவிழ்த்துவிடப்படும் இனவழிப்பிலிருந்து தற்காத்துக்கொள்ள நாம் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்படுவதே ஓரேயொரு தீர்வாக இருக்க முடியும். இந்நிலை சார்ந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை வழிப்படுத்தவே முயல்கின்றோம் எனத் தெரிவித்தார்.

நிகழ்வுகளின் நடுவே தமிழும் தமிழரும் என்ற சிறுவர் நாடகம் ஒன்று நடைபெற்றது.

தொடர்ந்து உரையாற்றிய திரு. பிரணவசிறி (பீற்றர்) தனதுரையில், புலம்பெயர்ந்த சமூகமாக எமது பலத்திலிருந்தே இன்று நாம் ஐ.நா அரங்கில் பலப்படுத்தியிருக்கும் இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணைவரை நாம் காணலாம். புவிசார் அரசியலில் சர்வதேச நாடுகள் தத்தமது நலன்களை முன்னிறுத்துவது இயல்பு. இருந்தபோதும் எமது பலத்தில் எமது நலன்களை முன்னிறுத்தி எமக்கான தெளிவான திட்டத்துடன் நாம் எமது மக்களுக்கான தீர்வை அடைய முடியும்.

சர்வதேசத்தில் பலம்பெறும் எமது நிலைப்பாடுகளை நீர்த்துப் போகச் செய்யும் போக்கில் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த்தலைமை களின் செயற்பாடுகள் தாயகத்திலும் புலம்பெயர் தேசத்திலும் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

ஆகவே இதை வலுப்படுத்த புலம்பெயர் சமூகமாக மாற்றத்துக்கான தேவை உணரப்பட்டதன் விளைவே இன்றைய நிகழ்வும் எமது தொடர்ச்சியான இது சார்ந்த முன்னெடுப்புகளும் ஆகும் எனத் தெரிவித்தார்.

ஆடலகம் நடனப்பள்ளி ஆசிரியர் அனோஜினி குமாரதாசனும், அவரது மாணவிகளும் வழங்கிய ஆடல் அடுத்து இடம்பெற்றது. தாய் மண்ணை முத்தமிட வேண்டும் என்ற பாடலுக்கு உணர்வு பூர்வமாக ஆடினர். பார்வையாளர்களின் கண்கள் கசியுமளவுக்கு இந்த ஆடல் உணர்வேற்றியது. இந்த நடனம் பலரதும் பாராட்டைப் பெற்றது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரான திரு. மணிவண்ணன் தனதுரையில், வட, கிழக்கில் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் சந்திப்புகள் பயனுள்ளதாகவும் கட்சியின் கொள்கைகளை

(22ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சூப்பர் சிங்கர்' ஜெசிக்கா விமான நிலைய வரவேற்பு










# சர்வதேச 'ஐஸ் ஹொக்கி' விளையாட்டில் ஈழத்துச் சிறுவனின் சாதனை



Swiss Jura தேசிய மாநில ஐஸ் ஹொக்கி கழகத்தில் mini top பிரிவில் பந்து காப்பாளராக 13 வயதான அஸ்வின் சிவசுப்பிரமணியம் விளையாடி வருகிறார். இவர் கடந்த பெப்ரவரி மாதம் Canada Bantiam Granbyயில் நடைபெற்ற சர்வதேச ஐஸ் ஹொக்கி 14 வயது பிரிவுப் போட்டியில் Team Swiss அணியின் பந்து காப்பாளராக விளையாடினார். இவரது Swiss team சாம்பியன் கிண்ணத்தைப் பெற்றது. அத்துடன் அனைத்துப் போட்டிகளிலும் அஸ்வின் இரண்டாவது சிறந்த பந்து காப்பாளர் பட்டத்தைப் பெற்று அனைவரதும் பாராட்டைத் தட்டிக் கொண்டார். சுவிஸின் முன்னணி விளையாட்டுக் கழகங்களில் ஒன்றான EHC Bienne (LNA) mini top பிரிவின் பந்துக் காப்பாளராகவும் அஸ்வின் சிவசுப்பிரமணியம் விளையாடி வருகின்றார்.

# யுனைட்டட் தமிழர் விளையாட்டுக் கழகத்தின் இன்னொரு சாதனை

கடந்த ஐந்து வருடங்களாக தமிழர்களுக்குப் பெருமை சேர்த்து வரும் இளம் வீரர்களையும் வீராங்கனைகளையும் கொண்ட யுனைடட் தமிழர் விளையாட்டுக் கழகம் (United Tamils Sports Club) கடந்த மாதம் யோர்க் பல்கலைக்கழக உள்ளக மைதானத்தில் நடைபெற்ற ஒன்றாறியோ மாகாண விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான Minor Track and Field போட்டியில் சாம்பியன் பட்டத்தையும் வெற்றிக் கிண்ணத்தையும் தனதாக்கிக் கொண்டது. மொத்தம் 49 விளையாட்டுக் கழகங்கள் இதில் பங்குபற்றியபோதிலும் ஐந்தாவது முறையாகவும் இவர்களே சாம்பியன் பட்டத்தைப் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது. 2006ம் ஆண்டு 25 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்விளையாட்டுக் கழகம் இன்று 350க்கும் மேற்பட்டவர்களுக்கு பயிற்சி அளித்து வருகின்றது. இவர்களில் ஐவர் தேசிய மட்டப் போட்டிகளுக்குச் சென்றுள்ளனர். பல மாணவர்கள் மாகாணரீதிப் போட்டியில் தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

## நன்றி! நன்றி!

கடந்த பெப்ரவரி 22ம் திகதி ரொறன்ரோ நகர மண்டப அங்கத்தவர் சபாபீடத்தில் இடம்பெற்ற 'தமிழர் தகவல்' இருபத்துநான்காவது ஆண்டு விருது விழாவுக்கு வழக்கம்போன்று கனடாவிலும், புகலிட நாடுகளிலும், இலங்கையிலுமுள்ள சகோதர ஊடகங்கள் வழங்கிய அபார ஆதரவுக்கு தமிழர் தகவல் வெளியீட்டகம் தலைசாய்த்து நன்றி தெரிவிக்கின்றது.

கனடா உலகத் தமிழர்
கனடா ஈழநாடு
கனடா தமிழர் செந்தாமரை
ஆகிய வார வெளியீடுகள் முழுப்பக்கமளவில் விழா பற்றிய செய்தியையும் ஒளிப்படங்களையும் வெளியிட்டன.
இங்கிருந்து வெளிவரும் *Monsoon Journal, Tamil Mirror* ஆகிய ஆங்கில மாதப் பத்திரிகைகள் விழா தொடர்பான செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒளிப்படங்களுடன் வெளியிட்டிருந்தன.
கனடாவில் ஒளிபரப்பாகும் ரி.வி.ஐ. தொலைக்காட்சி, தமிழ் வண் தொலைக்காட்சி மற்றும் ஓம்னி தொலைக்காட்சி ஆகியவை விழாத் தொகுப்புகளை ஒளிபரப்பின.
கனடிய தமிழ் வானொலி (*CTR*) மற்றும் இங்கிலாந்தின் அனைத்துலக உயிரோடை வானொலி (*ILC*) ஆகியவை விருது விழா பற்றிய விபரங்களை தகவல் தொகுப்பாக நேயர்களுக்கு வழங்கின.

ஜேர்மனியிலிருந்து வெளியாகும் 'வெற்றிமணி', கொழும்பிலிருந்து வெளியாகும் 'தினக்குரல்' ஞாயிறு பதிப்பு, 'வீரகேசரி' தினசரி, 'யாழ். உதயன்' தினசரி ஆகியவை விழாவுக்கு உரிய இடமளித்து செய்தியையும் ஒளிப்படங்களையும் பிரசுரம் செய்திருந்தன.
செய்தி.கொம், கெருடாவில்.கொம் ஆகிய இணையத்தளங்கள் ஒளிப்படத் தொகுப்புகளை வெளியிட்டு விருது விழாவுக்கு மதிப்பளித்திருந்தன.
இவை தவிர, முகம் தெரியாத பலரது முகநூல்களும், டுவிட்டர்களும் அடங்கிய சமூக ஊடகங்கள் விழாவுக்கு முக்கியத்துவம் கொடுத்து அது தொடர்பான விபரங்களை சர்வதேசமும் காவிச் சென்றன.
பெயர் தெரியாத அக்கறையுள்ள பலரது *utube* தளங்கள் விழா நிகழ்ச்சிகளை அப்படியே உலகெங்கும் எடுத்துச் சென்று பரவின.

ஆர்வமும் அக்கறையும் கலந்த அனைத்து ஊடக நண்பர்களுக்கும் மீண்டும் எங்கள் நன்றி!

திரு எஸ். திருச்செல்வம்
முதன்மை ஆசிரியர்

## கனடியத் தமிழரால் முன்னெ

# ஈழத்தமிழரின் அ
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ன்னெடுக்கப்பட்ட ஈழத்தமிழரின் 'மாற்றத்துக்கான குரல்'

# ன் அரசியல் மீள் எழுச்சிக்கான இணைவு
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# April 11th and 12th OPEN HOUSE


**Sat and Sun 2:00 to 4:00 PM**

**23 Killick Rd, Brampton ON** **$639,900**
(Sandalwood/Creditview)





**Fully Detached 5 Bed Room Mattamy Built 9 Ft Ceiling Home. Practical Layout With Den/Office area. Hardwood Floors. Spacious Upgraded Kitchen with S/S Appliances and Granite Countertop. Master with Full Ensuite, Standing Shower. All Bed Rooms Good Size.**

# Condo Unit FOR SALE | Tridel Built Luxury Condo | $339,900







## Kennedy / Hwy 401

**Bedrooms: 2 + 1 Washrooms: 2**
**With Parking ( Parking At Level 3) & 1 Locker**

Granite Counter Top In Modern Kitchen. Indoor Pool, Whirlpool, Gym, Billiard, Game Rooms, Party Room With Kitchen Facilities, Sauna & Stem Room, Guest Suites, Security Guard, Visitor Parking, 24 Hrs Concierge & Much More. Easy Access To Hwy 401.



## வீடு, வியாபார நிலையங்களை வாங்க விற்க

கனடியத் தமிழர் சமூகத்தில் நம்பிக்கையான ஒரு முகவர்

# கமல் நவரட்ணம்

**அடமான (Mortgage) ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்**

**Kamal** Navaratnam
Sales Representative
Direct: **416-671-4815**
E mail:kamalhomesale@gmail.com

**HomeLife/Future Realty Inc.**
Brokerage
205-7 Eastvale Drive
Markham ON, L3S 4N8
Bus: (905) 201-9977
Fax: (905) 201-9229
Independently Owned and Operated

*Trust and reliable services*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ARCHANAS & Co

One Stop Center For All Pooja Requirements



* All Temple Pooja Items,
Fresh Jasmine Flowers,
* Fresh Garlands,
Dance Jewelleries

HD Video & Photography,
Photo Album
Passport Photos & Movies.

Blu-ray Disc

Full HD 1080p

‘உங்கள் இல்லந்தோறும் இறையருள் பெற’

416-292-0033 www.archanas.ca

2950 Kennedy Rd. Unit 10A Scarborough (One Block North of Finch)

# அர்ச்சனாஸ் & கோ

அனைத்துவகை பூஜைப்பொருட்களின் களஞ்சியம்

பூஜைப்பொருட்கள்
மல்லிகைச்சரம்
பூக்கள் பூமாலைகள்
பரதநாட்டிய ஆபரணங்கள்
வீடியோ புகைப்படம்
திரைப்படங்கள் பாடல்கள்

All temple pooja items
Fresh jasmine and flower garlands
Dance items
HD Video & Photography
Passport photos

"உங்கள் இல்லம்தோறும் இறையருள் பெற"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையருக்கு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கும் புதிய நடைமுறை

வெளிநாடுகளில் தங்கியிருக்கும் இலங்கையர்கள் இரட்டைப் பிரஜாவுரிமையை பெற்றுக் கொள்வதற்கான புதிய நிர்வாக முறையொன்றை இலங்கை அரசாங்கம் அமுலாக்கியுள்ளது.

இதனடிப்படையில் வெளிநாடுகளில் வாழும் சகல இலங்கையர்களும் இரட்டைப் பிரஜாவுரிமையை பெற்றுக் கொள்வதற்கான உரிமையை பெறுவதுடன் இரட்டைப் பிரஜாவுரிமைக்காக விண்ணப்பிக்கவும் முடியும். அத்துடன் இலங்கையில் தங்கள் சிவில் உரிமையை முழுமையாக பெற்றுக் கொள்ளும் வகையில் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இரட்டைப் பிரஜா உரிமையை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பதாரி 250,000 ரூபாவை கட்டணமாக செலுத்த வேண்டும். அவ்வாறே, துணைவி அல்லது கணவன் ஆகியோர் 50,000 ரூபாவையும் 22 வயதுக்கு குறைவான, மணம் முடிக்காத ஒரு பிள்ளைக்காக 50,000 ரூபாவையும் செலுத்த வேண்டும்.

இதேவேளை, ஜப்பான், மத்தியகிழக்கு நாடுகளில் வாழும் இலங்கையர்கள் பல்வேறு காரணங்களுக்காக அந்நாட்டு குடியுரிமையை பெற்றுக் கொண்டுள்ள போதிலும் இலங்கைக்கான குடியுரிமையை இழந்தே அந்நாட்டு குடியுரிமையை பெற்றுக் கொண்டுள்ளனர். மீண்டும் இவர்கள் இலங்கைக்கான குடியுரிமை பெற வேண்டுமென்றால் அந்த நாட்டின் குடியுரிமையை இழக்க வேண்டும். இவர்கள் இரட்டைப் பிரஜாவுரிமைக்காக விண்ணப்பிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

எனினும், ஐக்கிய இராச்சியம், கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியுசிலாந்து, இத்தாலி, சுவீடன், சுவிட்சர்லாந்து மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் இரட்டைப் பிரஜாவுரிமையை பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்புகள் காணப்படுகின்றன. இந்நாடுகளில் வாழும் இலங்கையர்கள் இரட்டைப் பிரஜாவுரிமையைப் பெற்றுக் கொள்ள முடியும். அந்த நாடுகளில் மீண்டும் இலங்கை குடியுரிமையைப் பெற்றுக் கொள்ளும் போது அந்நாட்டு குடியுரிமை பறிக்கப்பட மாட்டாது.

இதனடிப்படையில் மேற்படி 9 நாடுகளில் வாழும் இலங்கையர்கள் அந்நாடுகளில் இருந்தவாறே இரட்டைப் பிரஜாவுரிமைக்காக விண்ணப்பிக்க முடியும். அவ்வாறில்லையானால் இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியிலும் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்திற்கு வருகை தந்து விண்ணப்பிக்கலாம். அல்லது www.immigration.gov.lk என்ற இணையத்தள முகவரிக்கு சென்று விண்ணப்பங்களை தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் விண்ணப்பங்களை முறையாக பூர்த்தி செய்து அந்நாடுகளில் உள்ள இலங்கை தூதுவராலய இரண்டாம்மட்ட உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தலுடன் இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

2011ஆம் ஆண்டு முதல் இலங்கையில் இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கப்படுவது திடீரென நிறுத்தப்பட்டது. ஆனால், கடந்த அரசாங்கத்தினால் சட்டவிரோதமான முறையில் யாருக்கும் தெரியாமல் வெளிநாடுகளில் உள்ள சிலருக்கு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளது. சுமார் 350 400 இற்கும் மேற்பட்டோர் இரட்டைப் பிரஜாவுரிமைக்காக விண்ணப்பித்து அதற்கான கட்டணத்தையும் செலுத்தியிருந்தனர். ஆனால், அவர்களுக்கு இரட்டை பிரஜாவுரிமை வழங்கப்படவில்லை. இரட்டைப் பிரஜாவுரிமையைப் பெற்றுக் கொள்வதற்காக நபர் ஒருவர் 55 வயதை பூர்த்தியடைந்திருந்தாலும் இதற்காக விண்ணப்பிக்க முடியும். அவ்வாறே, தொழில் அடிப்படையிலும் இரட்டைப் பிரஜாவுரிமையை பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்க முடியும்.

மேலும், இலங்கையில் 25இலட்சத்துக்கும் மேற்பட்ட சொத்துக்கு உரிமையுடையவராயிருத்தல் அல்லது மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் 25 இலட்சம் ரூபாவை மூன்று வருட நிலையான வைப்பில் சேமித்திருத்தல், வெளிநாட்டு வங்கிக் கணக்கில் 25ஆயிரம் அமெரிக்க டாலரை மூன்று வருட நிலையான வைப்பில் வைத்திருத்தல் போன்ற ஏதாவதொன்றை விண்ணப்பதாரி கொண்டிருந்தால் இரட்டைப் பிரஜாவுரிமைக்காக விண்ணப்பிக்க முடியும்.

## கனடியத் தமிழரால்..

மக்கள் புரிந்து கொள்ள வழி செய்வதாகவும் குறிப்பிட்டார். தமிழ்தேசிய கூட்டமைப்பினர் மீதான விமர்சனங்கள் மாற்றம் பற்றிச் சிந்திக்கத் தூண்டியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். மாற்றத்துக்கான குரல் போன்ற ஒரு செயற்பாட்டினை இலண்டனில் உருவாக்கிச் செயற்படுவோரில் ஒருவரான திரு. சசிதர் மகேஸ்வரன் தனதுரையில், கனடாவில் இயங்கிவரும் மாற்றத்துக்கான குரல் செயற்பாடுகள் தமக்குப் பெரும் உத்வேகத்தை வழங்குவதாகவும், இந்த முயற்சிகள் ஜெர்மனி, நோர்வே போன்ற நாடுகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரான திரு. செல்வராஜா கஜேந்திரன் உரையாற்றுகையில், கடந்த காலங்களை விட தற்போதைய எமது சந்திப்புகளில் பெரும் எண்ணிக்கையில மக்கள் கலந்துகொள்வது மக்கள் மத்தியில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை வெளிப்படுத்துகின்றது. இவ்வாறு களத்திலும் புலத்திலும் மக்கள் மத்தியில் ஏற்பட்டு வரும் மாற்றத்துக்கான ஆதரவானது தெளிவான அரசியல் செய்தியைச் சுட்டி நிற்கின்றது என்பதையும் எமது மக்களுக்கான தீர்வென்பது சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வாக அமையாதவரை களமும் புலமும் ஓயப்போவதில்லை என்பதையும் உறுதிப்படுத்துகின்றது. இது எம்மை மிகவும் உற்சாகப்படுத்தியுள்ளது எனக் கஜேந்திரன் தெரிவித்தார்.

நிறைவாக மாற்றத்துக்கான குரல் செயற்பாட்டாளரில் ஒருவரான மதியழகன் சிறீபாலன் நன்றியுரை வழங்கினார். நிகழ்வை நேர்த்தியாகத் தொகுத்து வழங்கிய குயின்ரஸ் துரைசிங்கம், உரைகளுக்கு நடுவே இச்செயற்திட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தினார். கூடியிந்த விருந்தினர் பெரும்பாலும் நிகழ்வுகளோடு ஒன்றியிருந்ததை அவதானிக்க முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - SATURDAY**

**(416) 266-5161**

(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB

## Computek College

BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

Est. 1991

Registered as a private career college under the Private Career Colleges Act, 2005



*Register for a Diploma Course and receive a*

*(offer valid until Dec 31, 2014 - some conditions apply)*




NOW ACCEPTING

INTERNATIONAL STUDENTS!

**WWW.COMPUTEK.EDU**

**Toronto Campus**
301-2347 Kennedy Rd.
416.321.9911

**Markham Campus**
202-7 Eastvale Dr.
905.471.3344

**Scarborough Campus**
248-2390 Eglinton Ave. E.
416.285.9941

**Diploma Programs:**

- Community Services Worker (CSW)
- Personal Support Worker (PSW)
- Early Childcare Assistant (ECA)
- Medical Office Admin. (MOA)
- Accounting & Payroll Admin.
- Computerized Accounting
- Int. Application Development
- Ent. Network Engineering
- Business Administration
- Network Engineering

**Are you unemployed or under-employed?**

Are you receiving or received EI?

Re-entering workforce after Maternity or Parental leave?

Second Career provides laid-off workers with skills training to help them find jobs in high-demand occupations in Ontario

SECOND CAREER
&
OTHER FUNDING
OPTIONS AVAILABLE
CALL FOR DETAILS

Financial assistance may be available for those who qualify




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது

# உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்







- மரண அறிவித்தல்கள்
  வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்

MARANAM.COM

**HEAVEN CARES**

ADVISING FAMILIES ON YOUR LOVED ONE'S FINAL JOURNEY

www.maranam.com, E-Mail: info@maranam.com

Working With

Chapel Ridge
FUNERAL HOME INC.

PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS
8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1



Call: **Vilosan Sivatharman** B.Eng
Funeral Director
**416-431-3600** Ext:1

Call: **Christeen Seevaratnam**
Funeral Counsellor
**416-431-3600** Ext:2






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..




- Corporate Awards
- Promotional Products
- Laser Engraving
- Pad Printing
- Silk Screening

*Vivek Subra*
Director
B:416- 291 2344
D:416- 898 4846
promarawards@gmail.com

www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5




வாங்குவதும் விற்பதும் சுலபமே ஆனால்..
தெளிவான தெரிவே உங்கள் வெற்றிப்படி.

***Why think so long...?***




416- 898 4846

- Free market evaluation
- Professional advice on selling your home for more
- State of the art marketing idea
- Flexible commission
- Friendly service producing excellent results
- List through me to have your property sold in a few days

Mortgages & loans arrangements

**Homelife/Future**
Realty inc. Brokerage
7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8
Bus: 905 201 9977, Fax: 905 201 9229
Independently Owned and Operated









# கோவில் மாலைகள் மற்றும் பூஜை பொருட்கள்

**5633 Finch Ave East, Unit # 6, Scarborough, ON M1B 5K9**
**(416) 288-1419**

சொரி பூக்கள், சரம் மற்றும் பூஜைக்கு தேவைப்படும் இலை வகைகள்

| | | | |
|---|---|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட கதம்ப சரம் | $ 2.00/ M | அறுகம் புல் | $ 3.00/bag |
| உள்ளூர் கார்னேஷன் சரம் | $ 2.00/M | வில்வம் இலை | $ 3.00/bag |
| மல்லிகைப்பூச்சரம் | $ 5.00/M | வேப்பிலை | $ 3.00/bag |
| கார்னேஷன் மலர்கள் | $ 0.20 each | Marukhalundu /Maru | $ 3.00 /bag |
| மல்லிகை மலர்கள் | $ 5.00/bag | மாவிலை | 10 per $ 1.00 |
| சம்பங்கி மலர்கள் | $ 3.00 /bag | வெற்றிலை | 10 per $ 1.00 |
| அரலி மலர்கள் | $ 3.00 /bag | வாழை இலை | $ 1.00 each |
| தாமரை மலர்கள் | $ 1.00 each | துளசி இலை | $ 3.00/bag |

Fancy Florist






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். கணேஷ்

# 2015 உலகக் கிண்ண கிரிக்கட் தொடர்ச்சியான சாதனைகள்!

கடந்த மாதம் 14ம் திகதி தொடங்கிய உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்கேற்ற 14 நாடுகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டன. இந்த 'லீக்' முடிவில் புள்ளிகள் அடிப்படையில் இரண்டு பிரிவிலும் முதல் 4 இடங்களை பிடித்த அணிகள் காலிறுதிக்கு தகுதி பெற்றன. அதன்படி 'ஏ' பிரிவிலிருந்து நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, இலங்கை, வங்கதேசம் ஆகிய 4 அணிகளும், 'பி' பிரிவில் நடப்பு சாம்பியன் இந்தியா, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள் ஆகிய 4 அணிகளும் காலிறுதிக்கு தகுதி பெற்றன.

கடந்த 18ம் திகதி தொடங்கிய முதல் காலிறுதிப் போட்டியில், லீக் சுற்றில் ஆதிக்கம் செலுத்தி வந்த இலங்கை அணியை தென்னாபிரிக்கா விரட்டியடித்து அரையிறுதிக்குள் நுழைந்தது.

இரண்டாவது காலிறுதிப் போட்டியில் கத்துக்குட்டி அணியான வங்கதேசத்தை புரட்டியெடுத்த இந்தியா அரையிறுக்குள் நுழைந்தது. மூன்றாவது காலிறுதியில் ஆஸ்திரேலியாவை பாகிஸ்தான் அச்சுறுத்திய போதும் அந்த அணி தொடரை விட்டு வெளியேறியது.

கடைசி காலிறுதிப் போட்டியில் மேற்கிந்திய தீவுகளை துவைத்து எடுத்த நியூசிலாந்து, இமாலய வெற்றியின் மூலம் அரையிறுதிக்குள் நுழைந்தது.

உலகக் கோப்பையில் அதிக ரன்கள் குவித்த வீரர் என்ற சாதனையை மார்டின் கப்தில் (237 ரன்கள்), கிறிஸ் கெய்லிடம் (215 ரன்கள்) இருந்து தட்டிப்பறித்தார். அத்துடன் உலகக் கோப்பை நொக் அவுட் சுற்று ஆட்டம் ஒன்றில் அதிக ரன்கள் எடுத்தவரான ஆஸ்திரேலியாவின் கில்கிறிஸ்டின் (149 ரன்கள்) சாதனையையும் கப்தில் முறியடித்தார்.

நியூசிலாந்து – வெஸ்ட் இண்டீஸ் இடையே நடந்த 4ஆவது மற்றும் இறுதி காலிறுதிப் போட்டியில் உலக கோப்பை நொக் அவுட் சுற்றில் ஒரு அணியின் அதிகபட்ச ரன் குவிப்பாக நியூசிலாந்து திரட்டிய 393 ரன்கள் அமைந்தது. இதற்கு முன்னதாக 2003ஆம் ஆண்டு உலகக் கோப்பை இந்தியாவுடனான இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியா அணி 359 ரன்கள் குவித்திருந்ததே அதிகப்பட்சமாகும்.

இந்த ஆட்டத்தில் 96 ரன்களை விட்டுக்கொடுத்த வெஸ்ட் இண்டீசின் ஆண்ட்ரே ரஸ்செல், உலக கோப்பை நொக்-அவுட் சுற்றில் அதிகமான ரன்களை விட்டுக்கொடுத்த மோசமான பவுலர் என்ற பெயரைப் பெற்றார்.

ஒரு நாள் கிரிக்கெட் வரலாற்றில் வெஸ்ட் இண்டீஸ் அணி 300க்கும் மேற்பட்ட இலக்கை இதுவரை ஒருமுறைகூட துரத்திப்பிடித்து வெற்றிபெற்றது கிடையாது.

உலகக் கிண்ண அரங்கில் 6 முறை அரையிறுதிப் போட்டியில் விளையாடிய ஆஸ்திரேலிய அணி தோல்வியை சந்திக்கவில்லை.

அரையிறுதியில் ஆஸ்திரேலியா 328 ஓட்டங்கள் சேர்த்தது. உலகக் கிண்ண அரையிறுதிப் போட்டியில் 300 ஓட்டங்களை கடந்த முதல் அணி ஆஸ்திரேலியாதான். இதற்கு முன்பு இதே உலகக் கிண்ணத்தில் ஆக்லாந்தில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான அரையிறுதியில் நியூசிலாந்து அணி 6 விக்கெட்டுக்கு 299 ஓட்டங்கள் எடுத்ததே அதிகபட்சமாக இருந்தது.

ஆஸ்திரேலியா இந்த ஆட்டத்தில் 95 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதே, உலகக்கிண்ண அரையிறுதியில் ஒரு அணியின் சிறந்த வெற்றியாகும். இதற்கு முன்பு 2003ம் ஆண்டு உலகக்கிண்ண அரையிறுதிப் போட்டியில் இந்திய அணி கென்யாவை 91 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து இருந்தது.

44 ஆண்டுகால ஒரு நாள் கிரிக்கெட் போட்டி வரலாற்றில், தொடர்ச்சியாக 4 ஆட்டங்களில் சதத்தை ருசித்த முதல் வீரர் என்ற அபூர்வ சாதனையை சங்கக்காரா நிகழ்த்தியுள்ளார்.

இதற்கு முன்பு பாகிஸ்தானின் ஜாகீர் அப்பாஸ் (1982 1983ம் ஆண்டு), சயீத் அன்வர் (1993), தென்னாபிரிக்காவின் கிப்ஸ் (2002), டிவில்லியர்ஸ் (2010), குயின்டான் டி காக் (2013), நியூசிலாந்தின் ராஸ் டெய்லர் (2014) ஆகியோர் தொடர்ச்சியாக 3 சதங்கள் அடித்ததே சாதனையாக இருந்தது. நீண்ட காலமாக நீடித்த இந்த சாதனைக்கு சங்கக்காரா முடிவு கட்டினார்.

மேலும் அவர் ஒரு உலகக் கிண்ண தொடரில் அதிக சதங்கள் நொறுக்கிய வீரர் என்ற சிறப்புக்கும் சொந்தக்காரர் ஆனார்.

இதற்கு முன்பு ஆஸ்திரேலியாவின் மார்க் வாக் (1996 உலகக் கிண்ணம்), இந்தியாவின் சவுரவ் கங்குலி (2003), ஆஸ்திரேலியாவின் மேத்யூ ஹைடன் (2007) ஆகியோர் ஒரு உலகக் கிண்ணத்தில் 3 சதங்கள் அடித்ததே இந்த வகையில் அதிகபட்சமாக இருந்தது.

விக்கெட் கீப்பிங் பணியிலும் சங்கக்காரா புதிய சாதனை படைத்துள்ளார். 36 ஆட்டங்களில் 54 பேரை ஆட்டமிழக்கச் செய்திருக்கும் (41 பிடியெடுப்பு மற்றும் 13 ஸ்டம்பிங்) சங்கக்காரா உலகக் கிண்ண அரங்கில் அதிக வீரர்களை அவுட் ஆக்கிய விக்கெட் கீப்பர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

இதுவரை இந்தச் சாதனை வரிசையில் முதலிடம் வகித்த ஆஸ்திரேலிய முன்னாள் விக்கெட் கீப்பர் கில்கிறிஸ்ட் (31 ஆட்டத்தில் 52 பேர் ஆட்டம் இழப்பு) பின்தள்ளப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HERITAGE
Education Funds

**RESP**
**SAVINGS PLAN**
**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**

உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com

## நீரிழிவு நோயாளர்களின்...

போன்ற அறிகுறிகள் வழமையாகத் தோன்றும். ஆனால் தன்னிச்சை நரம்புத் தொகுதி சேதமுற்றவர்களுக்கு இவ்வாறு தோன்றாது இருக்கக் கூடும். இதனால் குருதியில் சீனியின் அளவு அதீதமாகக் குறைவதை ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடிக்க முடியாத ஆபத்து உண்டு.

நரம்புப் பாதிப்பு ஏற்படும்போது இருதயம் மற்றும் குருதிக் குழாய்களின் இயல்பான செயற்பாட்டில் தொய்வு ஏற்படுவதால் இரத்த அழுத்தத்தை உடல் நிலைக்கு ஏற்ப ஏற்றி இறக்கிச் சமன்படுத்துவதில் பிரச்சனை எழலாம். இதன் காரணமாக படுத்திருந்துவிட்டு அல்லது இருக்கை நிலையிலிருந்து எழும்பும்போது இரத்தம் அழுத்தம் குறைதுண்டு. இதனால் தலைச்சுற்று, தலையம்மல், மயக்கம் போன்ற அறிகுறிகள் ஏற்படலாம்.

அதைத் தவிர இருதயத்தின் துடிப்பு விகிதம் கட்டுப்படுத்தப்படாமல் அதிகரித்த நிலையில் இருப்பதற்கும் நரம்புப் பாதிப்பு காரணமாகலாம்.

சமிபாட்டுத் தொகுதியில் நரம்புப் பாதிப்பு ஏற்படுவதால்தான் பல நீரிழிவு நோயாளர்கள் மலச்சிக்கல், வயிற்றுப் பொருமல், சமிபாடின்மை, ஓங்காளம், வாந்தி போன்ற பிரச்சனைகளால் பாதிக்கப்படுகிறார்கள்.

உணவு சமிபாடடைவதில் பிரச்சனைகள் ஏற்படுவதால் இரத்த குளுக்கோஸ் அளவானது எதிர்பாராத விதமாகக் கூடிக் குறையக் கூடும். உணவு விழுங்குவதில் சிரமும் ஏற்படலாம். மலச்சிக்கலும் வயிற்றோட்டமும் மாறி மாறி வருவதற்கும் நரம்புப் பாதிப்பு காரணமாகலாம்.

சிறுநீர்ப்பையிலிருந்து சிறுநீர் முழுமையாக வெளியேறாது தங்குவதும் நரம்புப் பாதிப்பால் நிகழலாம். நீரிழிவாளர்களில் சிறுநீர்த் தொற்று அதிகம் ஏற்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். கட்டுப்பாடின்றி சிறுநீர் தானே சிந்துவதற்கும் நரம்புப் பாதிப்பு முக்கிய காரணமாகும்.

பாலியலைப் பொறுத்த வரையில் பாலுணர்வு குன்றாத போதும் ஆண்குறி விறைப்படைதல், விந்து வெளியேறுதல் போன்றவற்றில் பிரச்சனைகள் ஏற்படலாம். உச்ச நிலையை அடைவதில் இருபாலாருக்கும் பிரச்சனை ஏற்படுவதுண்டு. பெண்களில் யோனி வரட்சியால் பாலுறவில் சிக்கல் ஏற்படுவதற்கு நரம்புப் பாதிப்பும் காரணமாகலாம்.

வியர்வைச் சுரப்புகளில் ஏற்படும் நரம்புப் பாதிப்பால் அவை சரியான முறையில் இயங்குவதில் சிக்கல் ஏற்படுவதுண்டு. சரும வெப்பத்தை சரியான அளவில் பேண முடியாதிருக்கும். இரவு வியர்வை, உணவு உண்ணும் போது வியர்வை போன்ற அறிகுறிகள் அதன் காரணமாக ஏற்படுவதுண்டு.

வெளிச்சம் இருள் ஆகியவற்றிக்கு ஏற்ப கண் விரிந்து சுருங்குவது பாதிப்படைவதால் இரவில் கார் ஓட்டுவதில் சிக்கல் ஏற்படுவதுண்டு.

தொடை, இடுப்பு, கால் போன்றவற்றில் வலியும், அவை வழமைபோல இயங்குவதில் சிரமம் ஏற்படுவதும் இத்தகைய நரம்புப் பாதிப்பால் ஆகும். பொதுவாக உடலின் ஒரு பக்கத்திலேயே இவ் அறிகுறிகள் ஏற்படும். இருக்கை நிலையிலிருந்து எழும்புவது இதனால் சிரமமாகலாம். ஆரம்பத்தில் குறிப்பிட்ட அந்தத் தந்தைக்கு நேர்ந்தது இதுதான்.

இத்தகைய நரம்புப் பாதிப்புகள் ஏற்பட்டால் அவற்றை குணமாக்க நீண்ட காலம் எடுகலாம். எனவே வராமல் தடுப்பதே உசிதமானது. நீரிழிவைக் கண்டுபிடித்து ஆரம்ப காலம் முதல் குருதிச் சீனியின் அளவை சரியான அளவில் கட்டுப்படுத்தி வைப்பதே நரம்புப் பாதிப்பை தடுப்பதின் முக்கிய அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# R & S AUTO SALES

Top Quality Used Car Dealer

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட

வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

**36 வருட அனுபவம்**



HONDA
TOYOTA
GM-MINI VANS

We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற

Radha

**R & S Auto Sales Inc.**
**Radha Motor Inc.**

3030 Markham Road
Scarborough, ON

**416-412-3838**
**416-836-5825**




எஸ். காந்தி

# வெள்ளிப் பணம்

94

வெள்ளிப்பணத் தொடரில் இந்த மாதம் 30ம் திகதியுடன் 2014ம் ஆண்டுக்கான வருமானவரிப்பத்திரம் பூர்த்தி செய்யும் கடைசி நாளாக அமைவதால் அதனைப் பற்றிய சில தகவல்களும் 2015ம் ஆண்டுக்குரிய மாற்றங்கள் சாதக, பாதக தன்மை பற்றிய தகவல்களாக அமைகின்றது.

இந்த வருட முதல் ஏப்ரல் 30ம் திகதிக்குப் பின்னர் தங்கள் வருமானவரிப் பத்திரத்தை சமர்ப்பிப்பவர்கள் CRA (Canada Revenue Agency) க்கு பணம் செலுத்த வேண்டி இருக்கும் சூழ்நிலையில் உடனடியாகவே நீங்கள் அதன் பெறுமதியில் 5 வீதம் தண்டனைப் (Penalty) பணமாக அறவிடுவார்கள். அது மாத்திரமல்ல அதற்குப் பின்னர் நீங்கள் செலுத்த வேண்டிய தொகைக்கு மாத வட்டியாக 1 வீதத்தினை செலுத்த வேண்டியிருக்கும். ஒரு வருடத்திற்கு நீங்கள் மொத்தமாக 17 வீதம் தொகையை மேலதிகமாக செலுத்த வேண்டியிருக்கும் அதாவது 12 மாதத்துக்கு 12 வீத வட்டியும் அத்துடன் 5 வீத தண்டனைப்பணமும் சேர்த்து இந்த தொகை வருகிறது.

அடுத்த படிநிலையாக வருமானம் குறைந்தவர்கள் குறித்த கால எல்லைக்குள் தங்கள் வருமான வரிப்பத்திரத்தினை பூர்த்தி செய்து அனுப்பாத நிலையில் அரசாங்கத்தினால் வழங்கப்படும் மாகாண அரசின் கொடுப்பனவு (Provincial Credit) GST/HST கொடுப்பனவு, Universal Child Care Benefit, Canadian Child Tax Benefit போன்ற சலுகைகள் பெறுவதில் தாமதம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு. இத்துடன் வீடு வாங்கி வைத்திருப்பவர்கள் தமது ஈட்டுக்கடனை (Mortgage) புதுப்பிக்க போகும்போது அல்லது புதிதாக வீடுவாங்க இருப்பவர்கள் கடன்களை பெற நிதி நிறுவனங்களை அணுகும் போது உங்கள் வருடாந்த வருமானத்தினை உறுதிப்படுத்துவதற்கு CRA யினால் உங்களுக்கு கொடுக்கப்படும் Notice of Assessment கொடுக்க வேண்டியிருக்கும். இதற்கு நீங்கள் நேரகாலத்துடன் உங்கள் வருமான வரிப்பத்திரத்தினை பூர்த்தி செய்து அனுப்புதல் அவசியமாகும்.

இந்த Notice of Assessment இன்று பல்வேறு தேவைகளுக்கு அவசியமானதொன்றாக காணப்படுகின்றது. மேற் சொன்ன காரணங்களை விட பொதுநல உதவிப்பணம் பெறுபவர்கள் தமது உறவுகளை தாய் நாட்டிலிருந்து வரவழைப்பதற்கான Sponsor செய்வதற்கு அல்லது கடுகதி நுழைவு குடிவரவு விசா (Super Visa) பெறுவதற்கு மற்றும் அரசாங்கத்தினால் வழங்கப்படும் மானிய அடிப்படையிலான வீடுகளில் வசிப்பவர்கள், படிக்கும் மாணவர்கள் கடன் பெறுவதற்கும் விண்ணப்பிப்பவர்கள் ஆகியோர் தமது கடந்த வருட வருமானம் எவ்வளவாக இருந்தது என்பதனை ஆதாரமாக நிரூபிப்பதற்கு இது அவசியமாகின்றது. இது ஒரு நம்பத்தக்க பத்திரமாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

சித்திரை 30ம் திகதிக்கு முன்பு நீங்கள் பத்திரங்களை E-file மூலமாக அனுப்பினால் இது உங்களுக்கு இரண்டு வாரத்துக்குள் கிடைக்கும். ஆனால் அதற்குப் பின்னர் அவர்கள் அதற்கான கால எல்லையை உறுதிப்படுத்தவில்லை. எனவே நீங்கள் இதனை எல்லாம் கவனத்தில் கொள்வது அவசியம்.

CRAக்கு வருமானவரி செலுத்த வேண்டியவர்கள் நேர காலத்துடன் அதற்குரிய தொகையை செலுத்தாத சந்தர்ப்பத்தில் அதற்கான வட்டி கூட்டு வட்டியில் கணக்கிடப்படுகின்றது.

இரண்டாவதாக நீங்கள் அவர்கள் அனுப்பும் தொடர்ச்சியான கடிதங்களை அல்லது தொலைபேசி அழைப்புக்களை தொடர்ந்து அலட்சியம் செய்து கொண்டு போகும்போது பின்வரும் எதிர்விளைவுகள் உங்களுக்கு ஏற்படலாம்.

நீங்கள் வேலை செய்யும் இடத்தில் இருந்து உங்கள் ஊதியத்தில் இருந்து அவர்கள் பணத்தினை பெறலாம்.

இரண்டாவதாக உங்கள் சொத்துக்களில் இருந்து பணத்தினை பெறுவதற்கு அவர்களுக்கு அதிகாரம் உண்டு உதாரணமாக உங்கள் சேமிப்புக் கணக்கு அல்லது வீடு அல்லது வாகனம் போன்றவை உள்ளடங்கும்.

இதற்கு மேலாக உங்கள் மீது பாரதூரமான குற்றம் புரிந்தவர் என்கின்ற நிலையில் உங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

எனவே இவற்றை எல்லாம் சிந்தித்துச் செயற்படுவது அவசியமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON

**416 321 6420**





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்



தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

தமிழர் தகவல் பிரதிகளை மாதாந்தம்
முத்திரைக் கட்டணம் செலுத்தி
தபாலிலும் பெறமுடியும். விபரங்களுக்கு

416 920 9250

e-mail: tamilsinfo@sympatico.ca



## ALL COUNTRIES TAMILS YELLOW PAGE

**CANADA & INTERNATIONAL MEDIA, NEWS, WEBSITE BUSINESS ADVERTISEMENTS & DIRECTORY**

BIRTHDAY WISHES & ANNIVERSARY :- Wedding & Business

ARANGETRAM :- Bharatham, Mirudangam, Veena & Etc... - MATRIMONIAL :- Marriage Broker Services

JOB AGENCY :- All Kinds of Employment Services - FUNERALS :- Obituaries & Etc...

2296 EGLINTON AVE, EAST @ BIRCHMOUNT RD UNIT 3C LOWER LEVEL SCARBOROUGH - TORONTO - ONTARIO - M1K 2M2 - CANADA
TEL: 416 644 7273 - TEL & FAX: 416 613 2919 - MOB: 416 752 4444 WEB: WWW.TAMILSYELLOWPAGES.COM E-MAIL: TYP@TAMILSYELLOWPAGES.COM

**WWW.ENGLISHYELLOWPAGE.COM - WWW.ASIANSYELLOWPAGE.COM**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா மூர்த்தி

# கண்டதைச் சொல்கிறேன் 21

மார்ச் மாதம் என்றால் சர்வதேச பெண்கள் தினம்தானே முதலில் நினைப்புக்கு வரும். ஆம். சென்ற மாதம் ஒரு பண்டிகைபோல மார்ச் 8 வாழ்த்துச் சொல்வதற்கு தமிழ் முகப்புத்தகப் பதிவர்களும் தவறவில்லை. வாழ்த்துக்கள் தெரிவித்த பலரும் பெண்களைப் பெருமைப்படுத்தும் பதிவுகளை இட்டிருந்தனர். கூடவே, வர்த்தக முயற்சிகளில் வெற்றிகரமான சாதனை செய்த பெண்களையே அவர்கள் உதாரணமாக எடுத்துப் பெருமைப்படுத்தியதுபோலவும் இருந்தது.

அதனாலேயோ என்னவோ ஓரிருவரின் பதிவுகள் அரசியலும் பேசின. அப்பேர்ப்பட்ட ஒருவர் *'தங்கள் வாழ்கையில் போராடி வெற்றி பெற்ற பெண்களை உதாரணமாக காட்டி பலரும் வாழ்த்து தெரிவித்திருந்தார்கள்..''* என ஆரம்பித்து, அதன் தொடர்ச்சியாக ஈழத்தில் பல்வேறு இயக்கங்களில் இருந்து போராடிப் பலியான பெண்களைப் பட்டியலிட்டு *'..இவர்கள் போராட்டங்களில் வெற்றி பெறாது விட்டாலும் தங்களுக்காகப் போராடாமல் மக்களுக்காகப் போராடி மக்கள் மனங்களை வென்றவர்கள்''* என முடித்திருந்தார். அட.. தோல்வியுற்றவர்களையும் பெண்கள் தினத்தில் நினையுங்களேன் என்று சொல்லாமல் சொல்வதுபோல இருந்த அந்தப் பதிவு மனதை தொட்டது.

அதை வரவேற்பதுபோல இன்னொருவர் *'பெண் வீட்டைத் தாண்டியும் யோசிக்க முடியும் என்பதை உணர்ந்து தம் பங்களிப்பை செய்தவர்கள் அவர்கள்.. என்னைப் பொறுத்தவரை எமது போராட்டம் வென்றாலும் தோற்றாலும் அவர்கள் என்றும் உண்மையான வெற்றிகரப் போராளிகள்தான்.''* என்று போராடிய அவர்களை மார்ச் 8இல் நினைவு கூர்ந்தார்.

*'உண்மைதான். ஆணாதிக்க சமூக அமைப்பில் தன் உரிமைகளை தக்க வைத்துக் கொள்ள போராடியதைவிட மண்ணின் விடுதலைக்காக தன்னை இணைத்து கொண்ட ஒவ்வொரு சகோதரிகளின் அர்ப்பணிப்பும் அளப்பரியது. பெண் என்ற அடிப்படையில் சமூகத்தில் மட்டுமல்ல இந்த விடுதலை அமைப்புகளிலும் பலவற்றை அவர்கள் எதிர்கொண்டு முகம் கொடுக்க வேண்டியிருந்தது.''* என்றிருந்தார் இன்னொருவர்.

அதன் தொடர்ச்சியாக *'எமது சமூக அமைப்பு ஒரு இறுக்கமான வலைப்பின்னல்... அதிலிருந்து வெளியேறி ஆயுத போராட்டத்தில் இணைவதென்பது இலகுவல்ல. போராட்டத்தின் தோல்விக்கு பின் அவர்கள் மறுபடியும் சமூகத்துடன இணைய முடியாத ஒரு சூழ்நிலையையே எதிர் நோக்கியுள்ளனர்.''* என இருந்த வரிகள் மனதை நெருடின.

குறிப்பிட்ட அரசியல், குறிப்பிட்ட இயக்கம் என்பதையும் தாண்டிய பொதுப்படையான கருத்துக்கள் இப்போது முகப்புத்தகத்தில் பெருமளவில் பரிமாறப்படுகின்றன. ஓரிருவர் இன்னும் பழையவர்களாகவே இருந்தாலும், பெருமளவானோர் சிந்திக்கவைக்கும் புதிய கருத்துக்களைத் தாராளமாக தத்தம் முகப்புத்தகங்களில் இடுகிறார்கள். அவ்வாறாக தமிழகத்தினர் ஒருவர் பெண்ணியம் குறித்து அவரது மனதில் பட்டதை நகைச்சுவையாகவும், ஆனால் அதனூடாக ஒருவகை சோகம் வெளிப்படும் வகையிலும் தந்திருந்தார். *'வீட்டின் எஜமானி தன் கணவனின் ஆண் திமிரை எதிர்த்து போராடிக்கொண்டிருந்தாள். வீட்டின் வேலைக்காரி எஜமானியின் பணத்திமிரை எதிர்க்கமுடியாமல் அழுது கொண்டிருந்தாள். அவ்வளவுதான் பெண்ணியம்.''* என்றிருந்தது அவரது அப்பதிவு.

தமிழகத்தின் தொலைக்காட்சி ஒன்றின் ஆதரவில் சர்வதேச பெண்கள் தினத்தையொட்டி நடைபெறவிருந்த தாலி சம்பந்தப்பட்ட விவாத நிகழ்ச்சி ஒன்று தமிழகத்தில் பலத்த பிரச்சனைக்குள்ளானதல்லவா.. அந்தச் சூட்டோடு சூடாக நவீன பெண் நிலைபற்றி பல ஆரோக்கியமான கருத்துக்களைப் பெண்கள் பலரும் முகப்புத்தகத்தில் இட்டார்கள் என்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டும். குறிப்பாக 'இன்றைய காலத்தில் தாலி அணியவேண்டுமா?'' என்ற தலைப்பில் இடம்பெற்ற முகப்புத்தக விவாதங்கள் தூள் கிளப்பின.

அன்றைய காலத்தில் தமிழர்கள் தாலி அணிவதில்லை என்பதைக் குறித்து *'கி.பி. 7ஆம் நூற்றாண்டில் திருமணச் சடங்குகளை ஒவ்வொன்றாகப் பாடுகின்ற ஆண்டாளின் பாடல்களில் தாலி பற்றிய பேச்சே கிடையாது. மாறாக, தான் கொன்ற புலியின் பல்லை எடுத்து வீரத்தின் சின்னமாக ஆண் தன் கழுத்தில் கோர்த்துக் கட்டிக் கொண்டால் அதைப் புலிப்பல் தாலி என்று பண்டைய இலக்கியத்தில் புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (புலிப்பல் கோத்த புலம்பு மணித்தாலி என அகநானூறிலும், புலிப்பல் தாலிப் புன்தலைச் சிறார் என புறநானூறிலும், இரும்புலி எயிற்றுத் தாலி இடையிடை மனவுகோத்து என திருத்தொண்டர் புராணத்திலும் வருகிறது.) தமிழ்நாட்டில் ஆதிச்சநல்லூர் உள்பட பல்வேறு இடங்களில் தோண்டி எடுக்கப்பட்ட புதை பொருள்களில் இதுவரை தாலி எதுவும் கிடைக்கவில்லை.''* என ஒரு பதிவு குறிப்பிட்டது.

சென்ற மாதம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயமும் சுவாரஸ்யமான பல பதிவுகளை முகப்புத்தகத்தில் தந்து கொண்டிருந்தது. இலங்கை நாடாளுமன்றத்தில் *'சிங்கள தீவினுக்கோர் பாலம் அமைப்போம்''* என்ற பாரதி பாடல் வரிகளை நரேந்திர மோடி குறிப்பிட்டதை ஒருவர் நாசுக்காக *'..இது சிங்கள தீவுன்னு சாட்சி அல்லவா சொல்லியிருக்கிறார் நரேந்திர மோடி.''* என்றிருந்தார்.

அதேபோல 'புதிய அணுகுமுறைக்கு மாறுங்கள்'' என்று மோடி சொன்னதை *'நீங்கள் இப்போது செய்துகொண்டிருக்கும் பம்மாத்து அரசியலை மாற்றுங்கள் என்றுதான் அவர் சொல்லிவிட்டுப் போயிருப்பதாகத்தானே அர்த்தம்?!''* என்று இன்னொருவர் அர்த்தப்படுத்தினார். நகுலேஸ்வரம் கோயில் தரிசனம், தலைமன்னார் ரயில் பாதையை திறந்து வைத்தது, யாழ்ப்பாணத்தில் கலாசார நிலையத்திற்கு அடிக்கல் நாட்டியது, வீடமைப்புத் திட்டத்தை திறந்து வைத்தது என இந்திய பிரதமரின் தமிழ்பகுதி நிகழ்வுகள் எல்லாவற்றையுமே முகப்புத்தகத்தில் பலரும் பகிர்ந்து கொண்டனர். ஆயினும் இந்தியப் பிரதமராக மோடியிடம் இருந்து எதையோ எதிர்பார்த்து ஏமாந்ததுபோன்ற ஒரு தோற்றப்பாடு அவர்கள் பதிவுகளில் இருந்ததையும் மறைப்பதற்கில்லை. சுருக்கமாக *'இப்போதைய இந்தியா ஒரு சர்வதேச சந்தை.!''* என்றார் ஒருவர்.

*''ஈழத்தமிழர்கள் சிங்களரிடம் அனுசரித்து செல்லவேண்டும்''* என நரேந்திர மோடி சொன்னார் எனக் கடுப்பாகிப்போன ஒருவரின் கமெண்ட் இது: *'இந்தியா சீனாவுடனும் பாகிஸ்தானுடனும் அனுசரித்துச் செல்லவேண்டும்''*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BUY - SELL - LEASE

for prompt & professional service

call

**Balamurale** Nagarajah

Sales Representative

Direct

**416-727-3843**



Century 21

INNOVATIVE REALTY INC.

Independently Owned And Operated BROKERAGE

Tel: 416-298-8383

balan homes

## நாளைய பொழுதுகள் உங்களை ஏமாற்றிவிடக் கூடும்!

**Life Insurance** ஒன்றே உங்கள் இழப்பீடுகளைச் சரிசெய்யும்

- Life Insurance - Term, Whole life
- Disability Insurance
- Critical Illness Insurance
- Non-Medical Insurance - Age 40 to 85

- Drug, Dental and Medical plan
- Mortgage Insurance
- RRSP - Loan and Investments
- RESP's - Education Saving Plan



உங்களின் ஆயுள் காப்புறுதியை இலவசமாக மீள்பரிசீலனை செய்து பூரண விளக்கம் தருகின்றோம்

ஆயுள் காப்புறுதி: குறிப்பிட்ட காலத்தின் பின்பு பணம் கட்டத் தேவையில்லை

மருத்துவக் காப்புறுதி: புற்றுநோய் போன்ற நோய்களுக்கெதிரான காப்புறுதி

வயோதிபர்களுக்கான காப்புறுதி: Non Medical Insurance

RRSP: முதலீடுகள் மற்றும் குறைந்த வட்டியிலான RRSP கடன் வசதிகள்

RESP: 20% - 40% அரச மானியத்துடன் 15% கூடுதலான Education Bonus

அடுத்த தலைமுறையினருக்கு சென்றடையும் சொத்துரிமைத் திட்டங்களுக்குரிய (Estate Planning) நிரந்தரக் காப்புறுதிகள்

சிறந்த நிறுவனங்களிடம் இருந்து குறைந்த கட்டணத்தில் அதிக ஆதாயங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்

**Mogan Selliah**

Insurance Advisor

**Direct: 416.569.3200**

Email: moganselliah@gmail.com

ROYAL BROKERS



INDUSTRIAL ALLIANCE · Sun Life Financial · Equitable Life · Assumption Life · RBC Insurance · La Capitale




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Get more from your home by paying less each month

Ragavan (Raga) Ramanathan AMP
Mortgage Development Manager
Platinum Performer

Scotiabank® You're richer than you think.®

Tel: 416.579.7533
Fax: 416.352.1464
Email: ragavan.ramanathan@scotiabank.com




SABESAN'S Choice

தனி மரத்தினாலான நிலம், நிலவிரிப்பு
சுவருடன் இணைந்த அலுமாரிக் கதவுகள்
யன்னல், கதவு புதுப்பித்தல்
ஆகிய வேலைகளில் தன்னிகரற்றவர்
"விருதுபெற்ற தொழிற்றுறை நிபுணர்"

Laminate, Mirror, Panel, Closet Droos
Carpet, Hardwood, Tiles, Granite Flooring
Windows + Doors, Kitchen + Bath
Renovation or NEW!!!!

Sabesan's Choice
416 605 1990





• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

JRB Universal Inc.
Almost All Services Available

647 289 6164

R.R. Rajkumar
B.Com (Hons), M.B.A.

Scholarship Plan [RESP]

Any Referral Service

• Credit Counseling • Accounting & Tax Services •





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமி பாதிக்கு மேல் அழிந்துவிட்டது

பூமி பாதிக்கு மேல் அழிந்துவிட்டது என்றும் மிக விரைவில் மனிதர்கள் வாழத் தகுதியற்றதாக மாறிவிடும் எனவும் சுவீடனைச் சேர்ந்த விஞ்ஞானி ஒருவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். பேராசிரியர் ஜான் ராக்ஸ்ரோம் தனது ஆய்வின் முடிவுகள் பற்றிக் கூறும்போது, "பூமியின் சமநிலை மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இதேநிலை நீடித்தால் பூமி மிக விரைவில் மனிதர்கள் வாழத் தகுதியற்றதாக மாறிவிடும். பூமியின் சம நிலையைப் பேணுவதற்கு தேவையான 9 காரணிகளில் ஏற்கனவே 4 ஐ நாம் தாண்டி விட்டோம்.

பூமியின் சம நிலைக்கு காரணமான 9 காரணிகளில் காலநிலை மாற்றம், பல்லுயிர் சம நிலை, நைட்ரஜன் மற்றும் பாஸ்பரஸ் பயன்பாடு, காடுகளின் அளவை 75 சதவீதமாக வைத்திருப்பது ஆகிய நான்கிலும் நாம் எற்கனவே அதிகபட்ச அளவைத் தாண்டிவிட்டோம். மீதியுள்ளவையான வளி மண்டலத்தில் நுண்துகள் மாசு அதிகரிப்பது, ஓசோன் மண்டல சிதைவு, கடல் அமிலத் தன்மை அதிகரிப்பு, நல்ல தண்ணீர் பயன்பாடு, மனிதன் உருவாக்கும் பொருட்களினால் ஏற்படும் மாசு ஆகியவற்றில் இன்னும் அதன் எல்லையை கடக்கவில்லை" என்று தெரிவித்துள்ளார்.

மேலும், உலகின் மக்கள் தொகை 1925 ல் 2 பில்லியனாக இருந்தது. ஆனால் தற்போது 7.2 பில்லியனாக அதிகரித்துள்ளது. அதேபோல் மனிதர்களுக்காக வளர்க்கப்படும் கால்நடைகளின் எண்ணிக்கை மிகவும் அதி கரித்துள்ளது. அதேசமயம் மற்ற உயிர் இனங்கள் வேகமாக அழிந்து வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஒரு காலத்தில் மனிதர்களின் நண்பனாக இருந்த பூமி இப்போது எதிரியாக மாறிவிட்டதாகவும் கூறியுள்ளார். இப்போதாவது நாம் விரைவாக இந்த பூவுலகை காக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் பின்பு ஒருபோதும் காப்பாற்ற முடியாது. இதனால் அதிகமாக பாதிக்கப்படப்போவது மனிதர்களாகிய நாம்தான்... என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஓர் ஆங்கில வார்த்தைக்கு நிகராக 47 தமிழ்ச் சொற்களா?

'போபியா' (**Phobia**) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தமிழ் வார்த்தைகள் ஒன்றல்ல இரண்டல்ல 47. ஓர் ஆங்கில வார்த்தைக்கு நிகராக 47 தமிழ்ச் சொற்களா? அந்த 47 வார்த்தைகளும் இங்கே...

(1) ஓடல், தேங்கல், ஜெரேலெனல், கூசல், திட்கல், உலமரல், அளுக்கல், ஜொள்கல், துடுக்கெனல், துட்கல், குலைதல், வெய்துறல், துண்ணெனல் என்பவை அச்சம் தோன்றுவதற்கான குறிப்புகளை உணர்த்துபவை என்றும் (2) அப்படித் தோன்றி நம் மனதை ஆக்கிரமிக்கும் அச்சத்தை வெருவு, சூர், பீர், வெறுப்பு, வெறி, வெடி, கவலை, பீதி, உருவு, பேம், பிறப்பு, கொன், உட்கு, பனிப்பு, அணங்கு, புலம்பு, அதிர்ப்பு, அடுப்பு, பயம், உரும், தரம் ஆகிய சொற்கள் அடையாளம் காட்டும் என்றும் (3) அச்சம் அடைந்த மனதில் சிந்தனையும், எண்ணங்களும் மாறுபட்டு, சிதிலமடையும் போது, அது கலக்கம் என்றும், துரிதம், பிரமம், கதனம் என்று குறிப்பிடப்படுவதாகவும் (4) கலக்கமுற்ற மனதில் ஏற்படும் நடுக்கம், விதிர்ப்பு, விதப்பு, கம்பம், விதலை, கம்பிதம், பனிப்பு, பொதிர்ப்பு, உலைவு என்ற சொற்களால் உணர்த்தப்படுகிறது.

(தமிழ்ச்சொல் அகராதி சூளாமணி நிகண்டு)

# New Ontario Polymer Birth Certificates Easier to Verify and Harder to Forge

Ontario birth certificates will now be more durable and secure, thanks to a new polymer material and innovative security features that make them difficult to counterfeit and easier to verify. Premier Kathleen Wynne unveiled the new Ontario birth certificates last month at St. Michael's Hospital. Birth certificates are important documents used to obtain other ID. Making them more secure will help prevent identity theft and fraud.

The polymer birth certificates have a variety of embedded security features, including raised print, transparent windows and colour-shifting images. They are also more durable and easier to clean than the current paper certificates. With normal use, they will last a person a lifetime. The new design and material will not increase the cost of ordering a birth certificate.

Introducing new polymer birth certificates is one of a number of measures the government of Ontario is taking to improve personal security and reduce fraud and identity theft, which hurt individuals, businesses, taxpayers and the economy.

# சூரிய சக்தியால் இயங்கும் விமானம்

சூரிய ஒளியால் இயங்கும் விமானம் ஒன்று உலகைச் சுற்றிவரும் சாதனை முயற்சியை அபுதாபியிலிருந்து ஆரம்பித்துள்ளது.

'சோலார் இம்பல்ஸ் 2' என்று அழைக்கப்படும் இந்த விமானம், அடுத்த ஐந்து மாதங்களில் அனைத்துக் கண்டங்களுக்கும் பயணித்து, பசிபிக் மற்றும் அட்லாண்டிக் பெருங்கடல்களையும் கடக்கவுள்ளது.


ஓய்வுக்காகவும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காகவும் உலகின் பல நாடுகளில் நிறுத்தப்படும் இந்த விமானம், அப்பகுதிகளில் 'தூய்மையான தொழில்நுட்பங்கள்' பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் பயணிக்கிறது.

இதற்கு முன்னர் இது போன்ற சூரிய சக்தியால் இயங்கும் விமான முயற்சிகள் வெற்றி பெற்றிருந்தாலும், உலகைச் சுற்றி வர எடுக்கப்பட்டுள்ள இந்த முயற்சி வியக்கத்தக்க முயற்சியாகவும், கடினமான முயற்சியாகவும் பார்க்கப்படுகிறது.

காலநிலை மாற்றதுக்கு எதிரான போராட்டத்தில் சூரிய சக்தி ஒரு பெரிய உதவியாக இருக்கும் என்று கருதப்பட்டாலும் அது போதுமானதாக அமையாது என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585


# FREE ! Real Estate Classes




## Successful Real Estate Office With Over 300 Salespeople

TOP 5 HOMELIFE OFFICE IN CANADA **2012** | TOP 6 HOMELIFE OFFICE IN CANADA **2011** | TOP 7 HOMELIFE OFFICE IN CANADA **2010**

★No Franchise Fees ★No Monthly Fees ★No Desk Fees

## International Award Winning Office

## Top 5th HomeLife Office In Canada-2012

- Atractive Commission Split.
- Over 300 Salespersons.
- Daily Training, Full Services Office
- 24 Hrs Access to the Office
- Office Open 7 Days/ Week

HOMELIFE HIGHER STANDARDS



**HOMELIFE /FUTURE REALTY INC.,** Brokerage
205 -7 Eastvale Dr., Markham, Ontario, L3S 4N7
**Bus: 905.201.9977 | 416.264.0101**
*Based on TREB data: 2012. (does not include independent or other franchisors). ©2012 HomeLife Realty Services Inc. All Rights Reserved.Each Office is Independently Owned and Operated. Not intended to solicit Agents or Brokers currently under contract.
*INDEPENDENTLY OWNED AND OPERATED*

**Selva Vettyvel**
*Broker of Record*
**Tel:416-568-4301**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org